16th JUNE 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 35 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com








வாசகர்கள் அனைவருக்கும்
இனிய ஹஜ்ஜுப் பெருநாள்
நல் வாழ்த்துக்கள்

– ஈத் முபாறக் –

# ஹாஜிகளின் நலன் கருதி பிரமாண்டமான ஏற்பாடுகள்

## முதன் முறையாக பறக்கும் taxy சேவை!

## ரோபோக்களும் பணியில்

## பிரமிக்க வைக்கும் சுகாதார ஏற்பாடுகள்

## முழு அரச நிறுவனங்களும் அர்ப்பணிப்பில்

**ஹஜ் 2024 இறுதிக் கட்ட தகவல்கள்**

சமூகமளித்தோர் 18,33,164
வெளிநாடு 16,16,310
உள்நாடு 2,21,854
ஆண்கள் 9,58,138
பெண்கள் 8,76,027
ஆசிய நாடுகள் 63.3
உள்நாடு 22.3
இதர 14.6

(அரபாவிலிருந்து
எம்.எச் . சேஹுத்தீன் மதனி)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக உலகின் நாலா பாகங்களில் இருந்தும் சுமார் இரண்டரை மில்லின் மக்கள் மக்காவில் ஒன்றுகூடியுள்ளனர்.

சவுதி அரேபியாவின் ஆறு சர்வதேச விமான

03ம் பக்கம்பார்க்க...

# தடைகளை உடைத்து வரலாறு படைத்த ஹஸன் ஸலாமா



திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவன் பஹ்மி ஹசன் ஸலாமா 15ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையை நிகழ்த்தவிருந்த நிலையில் அது ஒரு சில காரணங்களால் தடைப்பட்ட போதிலும்

02ம் பக்கம்பார்க்க...

# காத்தான்குடியில் மௌலவியின் மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம்

## - விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் -

(ஐ.ஏ. காதிர் கான்)

காத்தான்குடியில் மௌலவி ஒருவரின் மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம்

02ம் பக்கம்பார்க்க...

# திருமலை ஸாஹிரா மாணவிகளுக்கு உரிய தீர்வு பெற்றுத் தருவேன்

## ஆளுனர் செந்தில் தொண்டமான் உறுதி!



திருமலை ஸாஹிரா உயர்தர மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை திணைக்களத்துடன் கலந்துறையாடி உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக கிழக்கு ஆளுனர் செந்தில் தொண்டமான் உறுதியளித்தார். பாதிக்கப்பட்ட மாணவிகள் நேற்று ஆளுனரைச் சந்தித்து தமது பரீட்சை பெறுபேறுகள்

02ம் பக்கம்பார்க்க...

# நாளை ஹஜ் பெருநாள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் நாளை 17ஆம் திகதி திங்கற்கிழமை புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுகின்றனர்.

கடந்த 7ஆம் திகதி கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம் பெற்ற துல் ஹஜ் மாதத்திற்கான பிறை பார்க்கும் மாநாட்டில் புத்தளம் உள்ளிட்ட நாட்டில் சில இடங்களில் துல் ஹஜ் தலைப்பிறை தென்பட்டதால் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழு இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் புனித ஹஜ்ஜுப் பெருநாளை

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## காத்தான்குடியில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி மீன்பிடி இலாஹா வீதி அஹமட் லேனில் (14) வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வீடொன்றில் மௌலவியின் மனைவி மகனுடன் வசித்து வருவதாகவும், மௌலவி தற்பொழுது அவுஸ்திரேலியாவில் தொழில் புரிந்து வரும் நிலையிலேயே, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர் அவரை மிரட்டி தங்க நகைகளையும் 20 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக, காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச் சென்ற நபர், தற்போது காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கான மௌலவியின் மனைவி காயமடைந்த நிலையில், தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

காயமடைந்த மௌலவியின் மனைவி வீட்டில் தடயவியல் பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போது, அவரது வீட்டிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாளை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாடலாம் என்றும் 16ஆம் திகதியான இன்று ஞாயிற்றுக்கிழமை புனித அறபா நோன்பை நோற்கலாம் எனவும் உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தது.

இந்த வகையில் நாளை இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ஹஜ்ஜூப் பெருநாளை கொண்டாடவுள்ளனர். இந்த வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் பொது மைதானங்களிலும் ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை இடம்பெறவுள்ளது.

குறிப்பாக பல சமூக அமைப்புக்கள் பள்ளிவாசல்கள் மற்றும் சமய நிறுவனங்கள் என்பன பொது மைதானங்களில் ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகையை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தலை நகர் கொழும்பில் காலிமுகத்திடல் மற்றும் பொது மைதானங்களில் வழமைபோன்று பெருநாள் தொழுகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## தடைகளை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 45 கிலோ மீற்றர் தூரத்தை வெறும் 12 மணித்தியாலங்கள் 2 நிமிடங்கள் மற்றும் 27 வினாடிகளில் கடந்து வரலாற்றுச் சாதனை படைத்தார் ஹசன் ஸலாமா.

இந்தியாவின் தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து தலைமன்னார் வரையான 32 கிலோமீட்டர் தூரத்தை 8 மணி நேரத்தில் தாம் கடக்க எண்ணி அதற்கான மிகக் கடுமையான பயிற்சிகளை விமானப்படை கோப்பிறல் றொசான் அபேசுந்தரவிடமிருந்து பெற்று கடந்த 18ஆம் திகதி இவர் பாக்கு நீரினையின் இலங்கை கடல் எல்லையில் இருந்து தலைமன்னார் வரையிலான தூரத்தை பயிற்சி அடிப்படையில் நீந்தி கடந்துள்ளார்.

இந்நிலையில் 15ஆம் திகதி இந்தியாவின் தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து தலைமன்னார் வரையான 32 கிலோமீட்டர் தூரத்தை கடக்கும் முடிவுடன் அதிகாலை 2 மணிக்கு அவர் தனுஷ்கோடியில் குதித்து தலைமன்னாரை வந்தடையும் தீர்மானத்தினை எடுத்து பாதுகாப்புப் படை, விளையாட்டு அமைச்சு மற்றும் இச்சாதனை ஒளிப்பதிவு இவருடன் மேலும் கண்காணிப்பு ஊடக போன்ற விடயங்களுக்கு அனுமதி பெற்றுள்ளார்.

இந்நிலையில் 15ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்க இந்திய எல்லையிலிருந்து சலாமாவினால் இச் சாதனையில் களம் காண முடியாத வண்ணம் மிகப் பெரிய சிக்கல் நிலை ஏற்பட்டது. இருப்பினும் அதை ஒரு பொருட்டா எடுக்காத சலாமா இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட இடத்திலிருந்து சுமார் 45 கிலோ மீற்றர் கொண்ட தூரத்தை தன் இலக்காக கொண்டு 15ஆம் திகதி அதிகாலை 2.55 மணிக்கு கடலில் இறங்கினார்.

தன் இலக்கான 45 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்ற தலைமன்னார் கரையினை வெறும் 12 மணித்தியாலங்கள் 2 நிமிடங்கள் மற்றும் 27 வினாடிகளில் கடந்து வரலாற்றுச் சாதனை படைத்தார் ஹசன் ஸலாமா. தலை மன்னார் கடற்கரையில் ஸலாமாவை வரவேற்ற பெருந்திரலான மக்கள் குழுமியிருந்து சாதனை நாயகன் ஸலாமாவை சலாமா ஸலாமா என உரக்க குரல் கொடுக்க கரையை அடைந்த ஸலாமா இறைவனுக்கு நன்றி கூறும் வகையில் ஸூஜூதில் விழுந்தார்.

மேலும் ஸலாமா ஏற்கனவே 30க்கும் மேற்பட்ட பாடசாலை மட்ட நீச்சல் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிக் கிண்ணங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஆளுனரிடம் முறையிட்டனர்.

இது தொடர்பில் உடனடியாக தலையிட்டு தமக்குத் தீர்வு பெற்றுத் அவர்கள் ஆளுனரிடம் கேட்டுக் கொண்டனர்.

இதன் போதே ஆளுனர் இவ்வாறு மாணவிகளுக்கு தீர்வு பெற்றுத் தருவதாக உறுதி தெரிவித்தார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக காதுகளை மறைத்து பர்தா அணிந்து பரீட்சை எழுத முடியாத நிலையில், இம்மாணவர்கள் அவ்வாறு பரீட்சைகள் எழுதியதால் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் தாம் எதிர்கொண்டுள்ள இக்கட்டான நிலைமை குறித்து ஆளுநரின் கவனத்துக்கு கொண்டவந்த மாணவர்கள், தமக்கு உரிய தீர்வை பெற்றுதர நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், அவர்களுடைய பிரச்சினைகள் குறித்து பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய தீர்வை பெற்றுத்தருவதாக மாணவர்களிடம் உறுதியளித்தார்.



## ஹாஜிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்கள் மற்றும் ஜித்தா சர்வதேச துறைமுகத்தின் ஊடாக இவர்கள் சவுதியை வந்தடைந்துள்ளனர். ஹாஜ்ஜாஜிகள் எவ்வித அசௌகரியங்கள், நெருக்கடிகள் இன்றி சவுதியை வந்தடைவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் விமான நிலையங்களிலும் துறைமுகத்திலும் சவுதி அரசு மேற்கொண்டுள்ளது.

சவுதியை வந்தடைந்துள்ள ஹஜ்ஜாஜிகள் தங்கள் ஹஜ், உம்ரா கடமைகளை எவ்வித குறைபாடுகளும் இன்றி முழு மனத்திருப்தியுடன் மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை தேவைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் சவுதி அரேபியா சிறந்த முறையில் செய்து கொடுத்திருக்கிறது.

ஹஜ், உம்ரா கடமைகளை நிறைவேற்றவென வருகை தந்துள்ள அனைத்து ஹாஜிகளுக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் பணியில் சவுதி அரேபியாவின் முழு அரச இயந்திரமும் அர்ப்பணிப்பு மிக்க முழு மனப்பான்மையுடன் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும், சவூதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ், பட்டத்து இளவரசரும், பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் உட்பட்ட ஹஜ் விவகார அமைச்சு, இஸ்லாமிய விவகார அமைச்சு, உள்விவகார அமைச்சு, அமைச்சர்கள், முப்படையினர், பொலிஸார் அடங்கலான பாதுகாப்பு படையினர், தொண்டர் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஹஜ்ஜாஜிகளுக்கென உச்சளவில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். சவுதி மக்களும் கூட ஹாஜிகளுக்கு சேவையாற்றுவதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளக்கூடியவர்களாக இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

சவுதி அரேபிய ஆட்சியாளர்களும், சவுதி மக்களும் ஹஜ், உம்ரா கடமைகளை நிறைவேற்ற வருகை தரும் ஹாஜிகளுக்கு சேவையாற்றுவதில் ஒரு போதும் பின்நிற்காதவர்களாவர். ஹாஜிகளுக்கு சேவையாற்றுவதில் அவர்கள் எப்போதும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடியவர்களாக உள்ளனர். அதன் ஊடாக இறை திருப்தியை அடைந்து கொள்வதே அவர்களது ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது.

மன்னரின் விருந்தாளி திட்டத்தின் கீழ் இம்முறை ஹஜ் கிரியை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளவர்களில் ஒருவரான எனக்கு இவ்விஜயத்தின் போது ஹாஜிகளுக்கு சேவையாற்றும் சவுதியின் சில நிறுவனங்களது பிரதிநிதிகளை சந்தித்து அளவளாவும் வாய்ப்பு எமக்கு கிடைக்கப்பெற்றது. அச்சமயம் அவர்கள், முஸ்லிம்களுக்கு வருடத்தில் இரண்டு பெருநாட்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் மக்காவாசிகளாகிய நாங்கள் நோன்பு பெருநாளை மாத்திரமே கொண்டாடுகிறோம். ஹஜ் பெருநாளிலும் பெருநாள் காலத்திலும் ஹாஜிகளுக்கு சேவையாற்றுவதிலும் அவர்களது நலன்கள் தொடர்பிலுமே எமது கால நேரங்களை செலவிடுகின்றோம்' என்று குறிப்பிட்டனர். இது எம்மை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. மக்காவாசிகள் ஹஜ் பெருநாள் கொண்டாடுவதை விடவும் ஹாஜிகளுக்கு சேவை செய்வதையே சிறந்ததாகவும் முக்கியமானதாகவும் கருதுவதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இதேவேளை, ஹாஜிகளுக்கு சேவை செய்யும் பணியில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான வழிகாட்டல்களும் தயார்படுத்தல் பயிற்சிகளும் சிறந்த முறையில் அளிக்கப்பட்டுள்ளன. அவர்கள் மக்கா, மினா, அரபா, முஸ்தலிபா உள்ளிட்ட ஹஜ் கிரியையுடன் சம்பந்தப்பட்ட இடங்களிலும் ஹாஜிகள் தங்கியுள்ள ஹோட்டல்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் சேவையாற்றக் கூடியவர்களாக உள்ளனர். அவர்கள் தங்களது பணிகளுக்கு இறை திருப்தியையே ஒரே பிரதிபலனாக எதிர்பார்க்கக் கூடியவர்களாக உள்ளனர். அத்தோடு மருத்துவ தாதியர் பயிற்சியில் நன்குபயிற்றப்பட்ட சுமார் 5,000 தாதியரும் ஹாஜிகளுக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஹஜ்ஜாஜிகளுக்கான போக்குவரத்து சேவையை எடுத்து நோக்கினால் அது மிகவும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதை எம்மால் காண முடிகிறது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் பெருந்தொகை மக்கள் கூடியுள்ள போதிலும் அந்த அனைத்து மக்களுக்கும் தேவையான போக்குவரத்து சேவை எவ்வித குறைபாடுகளும் அற்ற முறையில் சிறந்த முறையில் முன்னெடுக்கபட்டுள்ளது. குறிப்பாக மினாவில் இருந்து அரஃபாவுக்கு பயணிக்க இலத்திரனியல் ரயில் போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று அரஃபாவில் இருந்து முஸ்தலிபா செல்வதற்கும் முஸ்தலிபாவில் இருந்து மீண்டும் மினாவுக்கு வருவதற்கும் சகல போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஹஜ் என்றால் அரஃபாவாகும். அரஃபாவில் ஒரு மனிதன் தரித்திராவிட்டால் ஹஜ்ஜை நிறைவேற்றியதாக அமையாது. இந்தப் பின்புலத்தில் ஹஜ் கிரியை மேற்கொள்ளவென சவுதிக்குள் வந்து சேர்ந்த பின்னர் ஏதாவது நோய் நொடிகளுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் தங்கி இருந்து சிகிச்சை பெறுபவர்களை அம்புலன்ஸ் வண்டிகளில் அழைத்து வந்து அரஃபா தினத்தில் அரஃபாவில் தங்க வைக்கும் ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு அபார சேவையாகும். ஹஜ் கிரியை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு நாட்டில் இருந்தும் பெருந்தொகை பணத்தைச் செலவிட்டே ஒவ்வொருவரும் சவுதி வருகின்றனர். அதனால் சவுதிக்குள் வந்த எந்தவொரு மனிதரும் அப்பாக்கியத்தை இழந்து விடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறான சேவை முன்னெடுக்கப்படுவதாக சவுதி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது அனைவராலும் மெச்சிப் பாராட்டப்படும் சேவையாக விளங்குகிறது.

இதேவேளை அவசர சிகிச்சை அல்லது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களை அழைத்துவருதல், அழைத்து செல்லல் அல்லது அவசர தேவைகளின் நிமித்தம் பயணிப்பதற்காக மினா, அரஃபாவில் இம்முறை முதற்டவையாக Air taxy சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு டயலிசிஸிஸ் செய்வதற்கான வசதிகள் சவுதியின் மருத்துவ துறையினரால் மினா, அரபா, முஸ்தலிபா போன்ற இடங்களிலும் அவர்கள் தங்கும் ஹோட்டல்களிலும் முதன்முறையாக இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் ஹஜ்ஜுக்கு வந்திருப்பவர்களில் அவசர இருதய சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட வேண்டியவரகளில் 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு இலவசமாக இருதய சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டள்ளன. அத்தோடு ஹஜ்ஜாஜிகளுக்கு சுகாதார அறிவூட்டல்களை வழங்கவென மக்கா, மதீனாவில் ரோபோக்களையும் சவுதி அரேபியா முதன்முறையாகப் பயன்படுத்தியுள்ளமையும் விஷேட அம்சமாகும்.

மேலும் மன்னர், பிரதமரின் பிரதமான அலுவலகங்கள் தலைநகர் ரியாத்தில் அமைந்துள்ள போதிலும், ஹஜ்ஜ/டைய காலத்திலும் நோன்புடைய காலத்திலும் மன்னர், பட்டத்து இளவரசர் அடங்கலாக அமைச்சர்கள், உயரதிகாரிகளும் நேரடியாக மக்கா, மதீனாவுக்கு வருகை தந்து ஹாஜிகளின் நலன்களில் கவனமெடுத்துக் கொள்ளக்கூடியவர்களாக உள்ளனர். இது எந்தளவுக்கென்றால் இம்மாதம் 14, 15, 16 ஆம் திகதிகளில் இத்தாலியில் உலக தலைவர்களின் ஜி 7 சர்வதேச மாநாடு நடைபெறுகிறது. அம்மாநாட்டில் பங்குபற்ற பட்டத்து இளவரசருக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் அதில் அவர் கலந்து கொள்ளுவதாகவும் கூறியிருந்தார். ஆனால் இந்த நாட்களில் சுமார் 25 இலட்சம் மக்கள் ஹஜ்ஜுக்காக மக்காவில் கூடியிருக்கும் சூழலில் அவர்களுக்கு சேவையாற்றுதற்கு முன்னுரிமை மாநாட்டில் கலந்து கொள்வதை அவர் தவிர்ந்து கொண்டிருப்பது நல்ல எடுத்துக்காட்டாகும். இது தொடர்பில் அவர் இத்தாலிய பிரதமருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இதேவேளை உலகின் பல பகுதிகளில் இருந்தும் வருடாவருடம் ஆயிரக்கணக்கான ஹாஜிகளை தமது சொந்த செலவில் விருந்தினராக மக்காவுக்கு அழைத்து அவர்கள் ஹஜ் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்கும் முறைமை சவுதி அரேபிய மன்னர்களால் நீண்ட காலமாக முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த வகையில் மன்னர் சல்மானின் நேரடி ஏற்பாட்டின் கீழ் இம்முறை 3300 க்கும் மேற்பட்டவர்கள் இத்திட்டத்தின் கீழ் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 20 பேர் இலங்கையைச் சேர்ந்தவர்களாவர். இத்திட்டத்தின் கீழ் அழைத்து வரப்பட்டுள்ளவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் இலட்சக்கணக்கான ரியால்கள் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்முறை பலஸ்தீனில் இருந்து 2000 பேர் இத்திட்டத்தின் கீழ் வரவழைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மன்னரின் விருந்தாளி என்ற திட்டத்தின் கீழ் ஹஜ்ஜை மேற்கொள்ள வாய்ப்பை பெற்றுக் கொள்பவர்களுக்கு இஹ்ராம் ஆடை முதல் விமான டிக்கட்டுகள், விசா, உழ்ஹிய்யாவுக்கான செலவு, ஸம்ஸம் நீர், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்குமிட வசதி உள்ளிட்ட அனைத்தும் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. அந்த வகையில் கடந்த 25 வருட காலப்பகுதியில் 66 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இத்திட்டத்தின் கீழ் அழைத்துவரப்பட்டு ஹஜ் செய்ய வாய்ப்பளிக்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JUNE 16 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பிறர் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பெருநாளை கொண்டாடுவோம்

இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையான ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவதற்கு உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் ஆவலுடன் தயாராகி வருகின்றனர். வசதி வாய்ப்பு உள்ளவர்கள் புனித மக்கா சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுகின்றனர் அதே நேரம் ஏனயவர்கள் தாம் வாழும் இடங்களில் இருந்து ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுகின்றனர். ஹஜ்ஜின் ஒரு முக்கிய அம்சம் தான் உழ்ஹிய்யாவை நிறைவேற்றுவது அது இஸ்லாத்தில் ஒரு முக்கியம் வாய்ந்த சுன்னத்தாகும். சில அறிஞர்கள் உழ்ஹிய்யா எனும் குர்பானி கொடுப்பது கடமை என்றும் கூறியுள்ளார்கள். குர்பான் கொடுப்பது பற்றி இறைவன் அல்குர்ஆனில் "உமது இறைவனுக்காக நீர் தொழுது குர்பானும் கொடுப்பீராக" (108:02) என்று குறிப்பிட்டுள்ளான் குர்பான் கொடுக்கும் போது நாம் வாழும் நாடு பல்லின மக்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து செயல்படுதல் அவசியமாகும்.

இந்த விடயத்தில் நாட்டின் சட்டத்தை மதித்து நடப்பது முக்கியமானது என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா வருடா வருடம் வலியுறுத்தி வருகின்றது இக்கடமையை நிறைவேற்றும் போது பிற மதத்தவர்கள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயல்பட வேண்டும் விலங்குகளுக்குரிய உரிமையையும் மதித்து செயல்படுதல் முக்கியமானதாகும் போலீசார் இந்த விடயத்தில் மென்மையாக நடப்பது அவசியமாகும் இது ஒரு சமய கடமையாகும் கடந்த காலங்களில் அரசாங்கம் சலுகைகளை வழங்கினாலும் சில போலீஸ் உத்தியோகத்தர்கள் கடுமையான நெருடல்களை வழங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு எனவே எமது நாட்டின் 1958 ஆம் ஆண்டின் விலங்குச் சட்டம் 29 ல் கூறும் விடயங்கள் கட்டாயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் விசேடமாக குர்பானுக்காக தெரிவு செய்யப்படும் விலங்குகள் சட்டத்துக்கு மதிப்பளித்து உரிய அனுமதியைப் பெற்று செய்வது அவசியம் ஆகும் இதே நேரம் ஹஜ் பெருநாளை கொண்டாடும்போது வறியவர்கள் பற்றி விசேஷமாக சிந்திக்க வேண்டும் அயலில் உள்ளவர்களை இணைத்துக் கொண்டாடுவது இன சௌகரியத்தை வளர்க்க உதவும் இலங்கையில் இருந்து இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக 3500 பேர் மக்கா சென்றுள்ளனர்.

சவுதி அரேபிய மன்னரும் இரு புனிதஸ்தலங்களின் பாதுகாவலருமான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் வழிகாட்டலின் கீழ் யாத்திரிகர்களின் நலனுக்காக பல நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது மன்னரின் அழைப்பில் உலகில் இருந்து சுமார் 2000 பேர் புனித கடமையை நிறைவேற்றுவதற்காக சென்றுள்ளனர் இவர்களில் 20 பேர் இலங்கையிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள், உலமாக்கள் வருடா வருடம் இந்த குழுவில் உள்ளடங்குகிறார்கள். இம்முறை இலங்கையில் இருந்து பாதுகாப்புத் துறை சார்ந்த ஐவர் உள்வாங்கப்பட்டிருப்பது வரவேற்புக்குறியது. இந்த விடயங்களில் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமுத் அல் ஹக்கான் ஆற்றும் பங்களிப்பு பாராட்டுக்குரியது மன்னரின் அழைப்பு விருந்தாளிகளாக 2000 பலஸ்தீனர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

யுத்தத்தின் மத்தியில் அழுது புலம்பி கொண்டிருக்கின்ற பலஸ்தீன மக்களுக்கு இது ஒரு நிவாரணமாக நிச்சயமாக அமையும் பலஸ்தீன யுத்த முடிவு பெற்று பலஸ்தீன மக்களுக்காக நிரந்தர தீர்வு ஒன்று கிடைப்பதற்கு இப்பெருநாள் காலத்தில் எல்லோரும் பிராத்திப்போமாக. நமது நாட்டிலும் சமாதானம் ஏற்பட்டு எல்லோரும் சுபீட்சமான நிலையை கண்டறிய இந் நன்நாளிலே பிராத்திப்போமாக.




# "ரீ20 பரிசு மழையுடன் உதயம்"

அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகியுள்ள ரீ20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளையொட்டி உதயத்தின் மாபெரும் பரிசுப் போட்டி.

இப் போட்டிக்கான கேள்விகளை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எமது இணையதளம் மற்றும் பத்திரிகை ஊடாக அறிய முடியும்.

பெறுமதியான பரிசில்களைக் கொண்ட இப் போட்டியில் வயது வித்தியாசமின்றி அனைவரும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

***போட்டி விதிமுறைகள்:***

- 10 கேள்விகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாக்களும் உதயம் இணையதளம், வட்ஸ்அப் குழுமங்களூடாக பிரசுரிக்கப்படும்.
- இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வினா பிரசுரிக்கப்படும். (மொத்தமாக வினாக்கள் முடிவடையும் திகதி 23.06.2024)
- பங்குபற்றும் போட்டியாளர்கள் 10 கேள்விகளையும் ஒன்றாக சேர்த்து A4 தாளில் கேள்விகளையும், விடைகளையும் எழுதி அதனை தெளிவாக Scan செய்து ஒரே தடவையில் கீழுள்ள வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
- ஒரு போட்டியாளரின் விண்ணப்பம் ஒரு தடவை மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.
- போட்டியாளர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை விடையனுப்பும் அதே தாளில் எழுதியும், வட்சப் இல் டைப் செய்தும் அனுப்ப வேண்டும்.
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
- விடை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: ஜுன் 25 - 27 ஆம் திகதிகளுக்கிடையில் அனுப்பி வைக்கவும்.

**விடையனுப்ப வேண்டிய வட்ஸ்அப் இலக்கம்: 071 341 6350**

**மேலதிக விபரங்களுக்கு உதயம் விளையாட்டு செய்திப் பிரிவு: 077 87 51 032**

## போட்டிக்கான வினாக்கள்

1. சம்பியன் அணி எது?
2. தொடர் நாயகன் விருதைப் பெறப்போவது யார்?
3. உலகக்கிண்ண தொடரில் அதிக ஓட்டங்களைப் பெறும் துடுப்பாட்ட வீரர் யார்?
4. உலகக்கிண்ண தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தும் பந்துவீச்சாளர் யார்?
5. தொடரில் அதிக சிக்சர்களை விளாதும் துடுப்பாட்ட வீரர் யார்?

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்



# இனரீதியான அரசியலில் இருந்து மீளுவோம்

**தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அருஸ் அஸாத்**



இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணப் போக்கில் முஸ்லீம்களாகிய நாம் அரசியல் செய்ய வேண்டிய காலம் வந்தடைந்து உள்ளது. மாறாக, அரசியலை நாம் இனத்துவ மனோநிலையில் இருந்து சிந்திக்கிற எமது பாரம்பரிய அரசியல் வழிமுறையை விட்டும் நாம் தவிர்ந்து கொள்ளும் தருணம் நெருங்கி விட்டது.

"எமது உரிமைகளை வென்று எடுப்போம்" மற்றும் "முஸ்லீம் நலன்களைப் பாதுகாப்போம்" என்ற கோசங்களை முன்வைத்து முஸ்லீம் அரசியலின் பிறப்பு நிகழ்ந்தது. சுதந்திரம் அடைந்தது முதல் 1980கள் வரை தேசியக் கட்சிகளின் ஊடாக முஸ்லீம்கள் இந்த எண்ணக்கருக்களை சமூகத்தில் வளர்த்து அரசியல் செய்யத் துவங்கினர். தேசியப் பிரச்சினைகளில் ஆழ்ந்த கவனம் கொள்ளாமல், தெற்கு முஸ்லீம் சமூகத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டும், எமது அரசியல் பிரமுகர்களின் லொபி நலன்களையும் முன்னிலைப்படுத்தியுமான முஸ்லீம் அரசியலாகவே அது இருந்தது.

1980 இற்குப் பிறகு முஸ்லீம்கள் மத்தியில் பேசுபொருளான முஸ்லீம் தனியரசியல் வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் நலன்கள், உரிமைகள் என்பனவற்றை அடிப்படையாக வைத்து தோற்றம் பெற்றது. "ஆள்பவர்களுக்கு ஆள்பலம் நாங்கள்தான்" என்ற இலக்கை அடைய முஸ்லீம் தனியரசியல் தெற்கிலும் கால்பதித்தது. இது தேசிய அரசியலில் செலுத்திய பயங்கர செல்வாக்கு முஸ்லீம் இனக்குரோதத்தை பெரும்பான்மை இன அரசியல் வாதிகள் முன்னிலைப்படுத்தி அரசியல் செய்ய காரணமாக அமைந்து விட்டது.

"எமது உரிமைகளை வென்று எடுப்போம்" மற்றும் "முஸ்லீம் நலன்களைப் பாதுகாப்போம்" என்ற எமது இந்தக் கோசம் தேசிய மக்களுடனான எங்களது சமத்துவமான இருப்பை தகர்த்து , எமது அரசியல் தனித்துவமானது என்ற பிம்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, இந்த நாட்டில் இரண்டாந் தரப்பினராக நாம் எம்மை அடையாளப் படுத்திக் கொள்ள காரணமாக அமைந்தது மட்டுமின்றி பெரும்பான்மை சமூகத்துடன் ஒரு முரண்பாட்டு அரசியலை வெளிக்காட்டவும் காரணமுமாகி விட்டது. இந்தப் பாராம்பரிய அரசியல் மனோநிலையிலிருந்து நாம் மீளும் காலம் வந்து நிற்கிறது.

இந்த நாட்டில் வழங்கப்பட்ட அனைத்து மக்களுக்குமான சகல உரிமைகளும் அனைவருக்கும் சமமானதே. அப்படியிருக்க உரிமை அரசியல் என்ற இனவாத அரசியலின் கோசம் ஒரு கானல் நீர், மாயை மட்டும்தான். இதை ஒவ்வொருவரும் மிகக் கவனமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் மறுக்கப்பட்டால் நீதிமன்றத்தை நாடவேண்டுமே ஒழிய அதற்கு கட்சி அமைத்து அரசியல் செய்வது அல்ல முறை. அவ்வாறு எமது உரிமைகள் மறுக்கப்பட்டு அவற்றை நீதிமன்றங்கள் புறக்கணித்த வரலாற்றை அடையாளப்படுத்தி முஸ்லீம் தனியரசியல் எழுச்சி பெறவும் இல்லை. மாறாக அன்று முஸ்லீம் தலைமைகள் தெற்கில் காணப்பட்டதால் வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் தேவைகள் கண்டுகொள்ளப் படாமை கிழக்கில் முஸ்லீம் தனியரசியல் தோன்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

ஆக, தேசிய கட்சியரசியல் ஊடாக முஸ்லீம் அரசியல் மற்றும் முஸ்லீம் தனியரசில் மூலமான முஸ்லீம் அரசியல் என்பன முஸ்லீம் நலன் இனச்சார்பு அரசியல் நகர்வாக இருந்ததே வரலாறு.

இந்த நாட்டைக் கட்டி எழுப்புவதற்காக பெரும்பான்மை சமூகத்திலிருந்து ஒரு சிறந்த குழுவினர் அரசியல் களத்தில் நிற்கிறார்கள். நாமும் சிறந்த மனிதர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்று சிந்திக்க வேண்டுமே ஒழிய முஸ்லீம்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்று இனரீதியாக சிந்திப்பது பிழையானது.

பிரச்சினைகள், தேவைகள் என்பன எல்லோருக்கும் பொதுவானவை. அவற்றுக்கு இனம், தேசியம் என்ற அடையாளங் கொடுத்து நாம் முரண்பட்டுக் கொள்வது அழிவையும் பின்னடைவையுமே எமது நாட்டுக்குத் தரும். மாறாக பிரச்சினைகளை தீர்பதற்கும், தேவைகளை அடைவதற்கும் ஆளும் வர்கம் நேர்மையாக இருக்க வேண்டும் மற்றது அவைகள் நடைமுறையாக சிறந்த நிர்வாக ஒழுங்கு முறைமை காணப்பட வேண்டும். இவை இரண்டுமே இலங்கையில் இருந்து இனவாத அரசியலை அகற்றப் போதுமானது என நான் கருதுகிறேன். இதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது.

# தியாகத் திருநாள் வாழ்த்துகள்!

**அஷ்ரஃப் சிஹாப்தீன்**

இறைத் தூதர்கள் பலர் நடந்த
இதய பூமியிலிருந்து
இந்த வாழ்த்து உங்களுக்கு வருகிறது

மேன்மை மிகு அறபுத் தேசங்களின்
மேட்டிமை மிகு தலைவர்களே
இந்த உலகின்
எல்லாச் செல்வங்களையும்
எல்லாச் சுகங்களையும் தொடர்ந்து அனுபவிக்க
அல்லாஹ் உங்களுக்கு அருள் செய்யட்டும்

எழுபத்தைந்து ஆண்டுகளாக
நாங்கள் ஸஈ ஓடிக் கொண்டிருக்கிறோம்

இந்த ஸஈ
அன்னை ஹாஜராவைப் போல்
எங்களுக்கும் குழந்தைகளுக்கும்
நீர் தேடி
உணவு தேடி
உயிர் பிழைக்கும் வழி தேடி

நீங்கள் சிம்மாசனத்தில் அமர்ந்தபடி
ஏளனத்தோடு எம்மைப்
பார்த்துக் கொண்டிருந்தீர்கள்
பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்

எல்லாக் காலங்களிலும்
எழுபத்தைந்து ஆண்டுகளாக
நாங்கள் குர்பான் கொடுக்கப்படுகிறோம்

நீங்கள் பங்காளிகளாக்கிக் கொண்ட
எதிரிகள்
எங்களைக் குர்பான் கொடுக்க
வெட்கம் கெட்டநீங்களோ
பார்த்துக் கொண்டிருந்தீர்கள்
பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்

அழுக்கு நீர் பருக்கப்பட்டு
எலும்புகள் வெளித்தெரியும் எங்களை
கும்பலாகவே
குர்பான் கொடுத்து விடுகிறார்கள்

இரத்தம் நனைத்த
இந்தப் புனித பூமியிலிருந்து சொல்கிறோம் -
ஒரு வகையில் நீங்களும் பங்காளிகளாகியிருக்க
எங்கள் மீது நிகழ்த்தப்படுவது
ஒரு கால வரம்பற்ற
கூட்டுக் குர்பானியே

எனவே
இக்காலத்தில் இன்னொரு குர்பான்
உங்களுக்கு அவசியமா என்று
அவசி முடிவெடுங்கள்

மேன்மை மிகு அறபுத் தேசங்களின்
மேட்டிமை மிகு தலைவர்களே
ஸூர் ஊதப்படும் வரை
இந்த உலகின்
எல்லாச் செல்வங்களையும்
எல்லாச் சுகங்களையும் தொடர்ந்து அனுபவிக்க
அல்லாஹ் உங்களுக்கு அருள் செய்யட்டும்!

(காஸா இளைஞன் ஒருவனின் பெருநாள் வாழ்த்துச் செய்தியைத் தழுவியது.)

# இனிப்பும் கசப்பும்



**சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்**

## முடிவு காணாத திருத்தங்கள்

காலத்துக்குக் காலம் முஸ்லிம்கள் தொடர்பான சட்டங்களை திருத்த திருத்தங்களை சிபாரிசு செய்ய கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன. சில திருத்தங்களுக்கு சிபாரிசுகளை செய்ய கமிஷன்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றில் சில அமைச்சரவையினால் அமைக்கப்படுகின்றன. சில அரச திணைக்களங்களினால் அமைக்கப்படுகின்றன.

சில வருடங்களுக்கு முன் முஸ்லிம்களின் கல்வி நிலை பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளை சமர்ப்பிக்க முன்னாள் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஹுசைன் தலைமையில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அதனை அப்போது இருந்த கல்வியமைச்சர் சுசில் பிரேமஸ யந்த நியமித்தார். அதன் செயலாளராக அப்போது கல்வியமைச்சின் அதிகாரியான இருந்த கலாநிதி ஹஜர்ஜான் மன்சூர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தக் கமிஷன் உத்தியோக பூர்வமாக கூடி மக்கள் அபிப்பிராயங்களை பெற்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கல்விமான்கள், தொழில் துறை சார்ந்த சமூக அமைப்புக்கள் இதன் முன் தமது ஆலோசனைகளை முன் வைத்தனர். கமிஷனும் திறமையாக செயல்பட்டு அறிக்கையை சிபாரிசுகளுடன் நூல்வடிவில் தயாரித்து அதற்கான நடைபெற்ற விழாவொன்றில் கல்வி அமைச்சரிடம் கையளித்தது.

அன்றிருந்த அதே கல்வி அமைச்சர்தான் இப்போதும் இருக்கிறார். ஆனால் பல வருட்கள் கடந்தும் இதுவரை அந்த சிபாரிவுகள் செயற்படுத்தப்படவில்லை. ஆந்த சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை எங்கு சென்றது என்பது கூட தெரியவில்லை. நாட்டின் ஏனைய அறிக்கைகளுக்கு நடந்த தலைவிதி இதற்கும் நடந்து விட்டது. முஸ்லீம் சமூகத்தின் பிரதிநிதிகள் நாம் எனக் கூறிக்கொள்ளும் அரசியல் வாதிகள் இதனை தட்டிக் கேட்கவில்லை.

அதைத் தொடர்ந்து முஸ்லீம் விவாக சட்டங்கள் தொடர்பான திருத்தங்களை சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. ஆந்தக் குழுவுக்கும் மக்களும் உலமாக்களும் சகூக இயக்கங்களும் தமது சிபாரிசுகளை முனவைத்தனர். ஆந்த குழுவும் சில சிபாரிசுகளை முன்வைத்தன.

இந்தக் குழுவுடன் முரண்பட்ட இன்னுமொரு தரப்பு சேர்ந்து ஒர குழுவை அமைத்துக் கொண்டு செயற்பட்டன. அது இதற்கு மாறான சில திருத்தங்களை முன் வைத்தன.

இந்த இரு குழுக்களதம் சிபாரிசுகளை ஊடகங்களால் வெளியிடப்பட்டன. அத்தோடு இந்த இரண்டு குழுக்களின் பின்னும் முஸ்லீம் சமூகம் பல பிரிவுகளாக பிரிந்து கருத்து வெளியிடத் தொடங்கின. இது விவாதமாக மாறிவிட்டது. மிகவும் கடினமான சொற் தாக்கதல் இடம்பெற்றன.

ஒன்றிலும்இல்லாதபொதுமக்கள்திக்குமுக்காடினர்.அவர்களுக்குஎன்னசெய்வதென்றே புரியவில்லை. வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் அவர்கள் இருந்தனர். இஸ்லாமிய சமூக விடயங்களில் ஒன்றுபட்டு செயல்பட வேண்டிய உலமாகக்ளும் மூன்று பிரிவாகி செயல்படத் தொடங்கினர். ஒவ்வொரு குழுவுக்கும் ஆதரவாளர்களும் ஒன்றுக்குமே இல்லாத அக்கரை இல்லாதவர்களுமாக மூன்று பிரிவானார்கள்.

இதற்கிடையில் இது தொடர்பான சிபாரிசுகளின் அடிப்படையில் தஃவா இயக்கங்களும் பிரிந்து செயற்பட்டன. அதிலும் பிரிவுகள் ஏற்பட்டன.

இதைவிட முஸ்லீம் ஆண்கள் பெண்கள் என இரு பிரிவுகள் செயற்படத் தொடங்கினர். முஸ்லீம் உரிமைக்கான பெண்கள் அமைப்புக்கள் மாறான கருத்துக்களை தெரிவித்தன. இவர்களது முயற்சிகளும், செயற்பாடுகளும் வேகமாகின.

இவை எல்லாம் நடந்து அமைதியாகி சில வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் ஒன்றுமே செயற்படுத்தப்படவில்லை. அரசாங்கம் இது பற்றி எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இந்தப் பிரிவினைகளால் ஒருமைத் தன்மை இல்லாததால் இந்த முயற்சிகளும் முடிவைக் காணவில்லை.

முஸ்லீம் விவாக சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்று எல்லாரும் ஏற்றுக் கொண்டாலும் இந்த கருத்து முரண்பாடுகளால் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை தட்டிக் கேட்பார் எவருமில்லை. அரசியல்வாதிகளும் தமது அடுத்த தேர்தலை பற்றி சிந்திக்கின்றவர்களே ஒழிய சமூகத் தேவை பற்றி சிந்திக்கவில்லை.

இதன்பின் மத்ரஸா கல்விபற்றிய சிபாரிசுக்கென ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதுவும் அரசாங்கத்தின் ஏற்பாடாகும். சஹ்ரான் குண்டுத் தாக்குதலின் பின் மத்ரஸாக்களுக்கு வந்த எதிர்ப்பின் பினன்ணியில் இவற்றை ஒரு வகைப்படுத்த வேண்டும் என்று எழுந்த கோரிக்கை காரணமாக இது நடந்தது. இது அவசரமானதும் அவசியமானதுடன் தேவையாகும். இதற்கென அமைக்கப்பட்ட குழுவுக்கு என்ன நடந்தது அவர்கள் என்ன செய்கின்றாகள் என்று தெரியவில்லை. ஒரு முடிவையும் காணவில்லை.

முன்னைய அரசாங்கத்தின் அமைசச்ர் ஒருவர் மத்ரஸா பாடத்திட்டம் பொதுப் பரீட்சை போன்ற விடயங்களை செயற்படுத்த முயற்சி எடுத்த போதம் பாடத்திட்ட விடயத்தில் தஹ்வா இயக்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காணரமாக சரிவரவில்லை.

இறுதியாக வக்புச் சட்டங்கள் தொடர்பான திருத்தங்களுக்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் இது தொடர்பான அறிவும் அனுபவமும் சட்ட அறிவும் உள்ளவர்களா என்பது தெளிவில்லை.

இந்தக் குழுவாவது பகிரங்க அறிவித்தல் கொடுத்து விற்பனர்களினதும் உரிய சமூக அமைப்புகளினதும் அத்துடன் அனுபவங்களின் சட்டத்தோடு தொடர்புடையவர்களினதும் ஆலோசனைப் பெறுபவர்களா என்பது நிச்சயமில்லை. அரசாங்கம் நியமித்த ஏனைய குழுக்கள் மக்கள் ஆலோசனைகளை பகிரங்கமாக அறிவித்து பெறுவது வழக்கம். ஆனால் எமது முஸ்லீம் விவகாரத் திணைக்களம் அவ்வாறு செய்வதை காணவில்லை.

சுட்டத் திருத்தங்கள் அடிக்கடி செய்யும் சந்தர்ப்பம் கிடைக்காது. எனவே, கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரே முறையில் செய்து கொள்ள வேண்டும். இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அரசியல் இலாபம் சொந்த இலாபம் கருதியே எவருக்கும் பயந்தோ எதவும் செய்யக்கூடாது.

# இலங்கை மக்களுக்கு செழிப்பான நல்ல எதிர்காலம் கிட்டவேண்டும்

## சவூதி தூதுவரின் பெருநாள் வாழ்த்து!



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்க்கான சவூதி அரேபிய தூதரகத்தின் சார்பாக, ஈத் அல்-அழ்ஹா தியாகத் திருநாளை முன்னிட்டு இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாம் வல்ல இறைவன் தனது புனித வீட்டைத் தரிசிக்கச் சென்றிருக்கும் ஹஜ் யாத்ரீகர்களின் ஹஜ் மற்றும் நற்செயல்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் தங்களது அனைத்துக் கடமைகளையும் ஆரோக்கியமான நிலையில் நிறைவேற்றிக் கொள்ள அருள் புரிய வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

மேலும், இத் தியாகத் திருநாளை அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் மீண்டும் மீண்டும் கொண்டாடி மகிழ அருள் புரிய வேண்டும் எனவும், நட்புறவு மிக்க இலங்கை மக்களுக்கு முன்னேற்றம் மற்றும் செழிப்புடன் கூடிய நல்ல எதிர்காலம் கிட்டவேண்டும் எனவும் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

# பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய மாணவி பாத்திமா நிஹ்லா பாராட்டி கௌரவிப்பு



(பீ.எம்.முக்தார்)

அன்னையின் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சிறப்பு சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் (10) கல்வி அமைச்சில் இடம்பெற்றது. இதில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தையும் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று சாதனை நிலை நாட்டிய பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய மாணவி பாத்திமா நிஹ்லாவும் கௌரவிக்கப்பட்டார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயன்த்த தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சின் உயர் அதிகாரிகள் மேற்படி பாடசாலை பிரதி அதிபர் எம்.எஸ்.எம். நப்ஹான், மாணவியின் தாயார் பாத்திமா ஹரீஸியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# புனித மக்காவில் ஆண் குழந்தையை பெற்றெடுத்த நைஜீரிய யாத்திரிகர்

(ஐ.ஏ. காதிர் கான் )

புனித ஹஜ்ஜுக் கடமைகளுக்காக புனித மக்கா சென்ற நைஜீரிய யாத்திரிகரான பெண் ஒருவர், ஹஜ் பருவத்தின் முதலாவது குழந்தையை, மக்காவில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் பெற்றெடுத்துள்ளார்.

"முஹம்மத்" என்று பெயரிடப்பட்ட இந்தக்குழந்தை மற்றும் தாய் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக, மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கர்ப்பிணியாக இருந்த பெண், கடந்த புதன்கிழமை மக்கா "ஹெல்த் கிளஸ்டரின்" கீழ் உள்ள "ஹரம்" அவசர சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்பட்டார்.

அவசர மருத்துவர்கள் உடனடியாக கவனித்து, மகப்பேறு வார்ட்டுக்கு மாற்றினர்.

அங்கு அவருக்கு இயற்கையான முறையில் பிரசவம் நடந்தது. இருப்பினும், புதிதாகப் பிறந்த குழந்தை, குறை மாதமாக இருப்பதால், சிறப்புக் கவனிப்பு அளிக்கப்படுகிறது.

மக்கா மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, ஹஜ்ஜின் போது யாத்திரிகர்களுக்கு சுகாதார சேவைகளை வழங்க முழு திறனுடன் செயல்படுவதுடன், அவசர சிகிச்சைப் பிரசவ ஆதரவு மற்றும் விரிவான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ சேவைகளும் வழங்கப்படுகின்றன.

இந்த மருத்துவமனையில், ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் பருவத்தில் ஏராளமான குழந்தைகள் பிரசவிக்கின்றன.

நைஜீரிய யாத்திரிகரான அப்பெண் மணி, பிரசவத்தின் போது மருத்துவ ஊழியர்களின் சிறப்பான கவனிப்புக்கு, தனது சிறப்பான நன்றியையும் மகிழ்வையும் தெரிவித்துள்ளார்.

# சிலாபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் ஒன்றுகூடல்



(எம்.எச்.எம் சியாஜ், எம்.யூ.எம் சனூன்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடல் (15) சிலாபம் பா. இன் கடற்கரை ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சின்ந்தக மாயாதுன்ன அமைச்சின் செயலாளர் விமலவீர மற்றும் அமைச்சின் ஊடக செயலாளர் நல்லப்பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சட்ட ரீதியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று சென்று நாடு திரும்பியவர்களின் ஒளிப்பதிவு வீடியோ பதிவு செய்து வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்த ஆறு ஊடகவியலாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டது.

மேற்படி ஊடக ஒன்றுகூடலில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள மும்மொழிகளையும் சேர்ந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைச் சேர்ந்த சுமார் 30 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
Counseling & Psychology
Teacher Training
Business Management
Spoken English
AMI Montessori
Child Psychology
IT Programs
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907
Awarded By: INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk
HND (UK) PROGRAMS
HND (UK) in Business Management
HND (UK) in Computing
HND (UK) in Teacher Training
HND (UK) in Psychology
HND (UK) in English
CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
Bachelors in Psychology
Bachelor of Education
BBA / MBA
BA in English
BSC IT
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032
AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk




நாச்சியாதீவு பர்வீன்

# எழுத்துலகில் சுடர் விட்டெரிந்த இலக்கிய தீபம் சுலைமா சமி இக்பால்

அதற்கான காரணம் அவர்களுக்கு புரிந்துணர்வுள்ள குடும்பமும், அவர்களின் உணர்வுகளை புரிந்து,அவர்களின் ஆற்றல்களை உணர்ந்து தட்டிக் கொடுக்கின்ற சரியான துணை அமைந்தமையே எனலாம் அந்த வகையில் அண்மையில் எம்மைவிட்டுப்பிரிந்த சுலைமாசமி இக்பால் அவர்களின்

2015 கள் என நினைக்கிறேன் அவசரமாக மாவனல்லை செல்ல வேண்டிய ஒருபயணத்தில் எனக்கு நன்கு அறிமுகமான சுலைமா சமி தாத்தாவுக்கு கோல் பாண்ணுகிறேன்.

மாவனல்லை வருவதென்றால் தமது வீட்டுக்கு வந்து பகலுணவை அருந்திவிட்டே செல்லவேண்டும் என்ற அன்புக்கட்டளை, அத்தோடு அவரது கணவர் இக்பால் மௌலவி பர்வீன் கட்டாயம் எங்கள் வீட்டுக்கு பகல் சாப்பாட்டுக்கு வரவேண்டும் என்று உறுதிபட கூறினார். சாப்பாடு எல்லாம் தேவையில்லை வீட்டு வருகிறேன் என்றேன் பி.ப 3.00 மணியிருக்கும் மாவனல்லை பேருந்து நிலையத்தில் இறங்கியவுடன் தொலைபேசியில் அழைக்கிறேன் அடுத்த நொடியே பதில் வருகிறது. அடுத்த சில நிமிடங்களில் இக்பால் மௌலவி பேருந்து நிலையத்திற்கு வந்து என்னை வீட்டுக்கு கூட்டிசென்று பகலுணவை தந்து அன்பாக உபசரித்து அனுப்பி வைத்தனர். அந்த நிகழ்வு இக்பால் மௌலவி மீதும் சுலைமா சமி அவர்கள்

தொடரான இலக்கிய இருப்புக்கும் வெற்றிக்கும் மிக முக்கிய காரணங்களில் ஒன்று அவரது கணவர் இக்பால் மௌலவி என்பதை அவர் பல இடங்களில் நன்றியுடன் கூறியுள்ளார்.

இஸ்லாமிய பெண்கள் இலக்கிய துறையில் அல்லது எழுத்துலகில் பிரகாசிக்க ஆரம்பிக்கின்ற போதே முதலில் குடும்பமும் உறவுகளும் தடைக்கல்லாக அமைந்து விடுகின்றனர்.

இதில் விதிவிலக்குகளும் உள்ளன என்பதை கருத்திற்கொள்ளவேண்டும். பெண்களின் திருமணத்தின் பின்னர் கணவர் உடன்படா விட்டால் எவ்வளவு திறமை இருந்தாலும் அப்பெண்ணால் மிளிர முடியாது. அந்த வகையில் சுலமாசமி இக்பாலுக்கு அவர் எழுத்துலகில் வெற்றிபெறவும், தவிர்க்க முடியாத ஒரு ஒரு பெண் எழுத்தாளு மையாக மிளிர்வதற்கும் அவரது குடும்பம் மற்றும் கணவர் இக்பால் மௌலவி ஆகியோரின் ஊக்குவிப்பும், ஒத்துழைப்பும் இருந்துள்ளதை

மற்றும் மூத்த மகள் இன்சிரா இக்பால் ஆகியோரும் எழுத்தாளர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.இவரது எழுத்தாளுமைக்கு சான்றாக இலங்கை அரசு கலாபூசணம் விருதை வழங்கி இவரை கௌரவித்தது.

எழுத்தாளர் கலாபூஷணம் சுலைமா சமி இக்பால், கடந்த . 45 வருடங்களுக்கு மேலாக இலக்கியம் படைத்து வந்தவர். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என 6 நூல்களை வெளியிட்டுள்ளார்.. சர்வதேச ரீதியிலும் சிறுகதை, நாவல், கவிதை ஆகிய போட்டிகளில் பரிசுகளும் வென்றுள்ள சுலைமாசமி இக்பால் . திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் சிலகாலம் பார்வையிழந்தவர்களுக்குக் கற்பித்துள்ளார். இவரது புத்தகங்களை குரல் வடிவில் பதிவு செய்து அவர்களுக்கு வழங்குவதைப் பழக்கமாக்கிக் கொண்டுள்ளார். இதன் மூலம் விழிப்புலனற்ற வர்களும் இலக்கியத்தின் சுவையை உணரவும், சுவைக்கவும் முடியும் என்பதை நிரூபித்து ள்ளமை இவரது அரும்பணியாகும் .
அதே போல் மகள் எழுத்தாளர் இன்ஷிரா இக்பாலின் புத்தகங்களையும் இலங்கையின் பார்வையற்றோர் சங்கம் இறுவெட்டாகப் பதிவு செய்துள்ளது. இவற்றை வெளிநாடுகளிலும் உள்ள விழிப்புலன் இழந்தவர்கள் கேட்டுப் பயன் பெறுவது மகிழ்ச்சிக்குரியது. நானறிந்த வகையில் விழிப்புலனற்றவர்களுக்காக தமிழில் உருவாக்கப்பட்ட



ஜரீனா முஸ்தபாவின் பல நூல்களையும், கலாபூசணம் ஸக்கியா சித்தீக்கின் முதலாவது நூலையும், இன்னும் சில எழுத்தாளர்களது நூல்களையும், இஸ்லாமிய, அரபு நூல்களையும் எக்மி பதிப்பகத்தின் மூலம் வெளியிடபட்டுள்ளனர் என்பதும் இந்நேரத்தில் பதியவேண்டிய செய்தியாகும்.

இவர் இலக்கிய உலகிற்கு தந்த நூல்கள்
வைகறைப்பூக்கள் (சிறுகதை)- 1988
மனச்சுமைகள் (சிறுகதை)- 1989
திசை மாறிய தீர்மானங்கள்(சிறுகதை)- 2007
ஊற்றை மறந்த நதிகள் - (நாவல்) 2009
நந்தவனப்பூக்கள் (சிறுவர் இலக்கியம்) - 2015
உண்டியல் (சிறுகதை) - 2018
என்பனவாகும்.

தனது எழுத்திற்க்காக பல பட்டங்களையும் கௌரவங்களையும் இவர் பெற்றுள்ளார். 2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியப் பங்களிப்புக்காக விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.அவ்வாறே

அகில இன நல்லுறவு ஒன்றியம் நடத்திய 2008 ஆம் ஆண்டிற்கான சாமஸ்ரீ பாராட்டு விழாவில் சாமஸ்ரீ கலாஜோதிப் பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப் கௌரவிக்கப் பட்டார்.

அகில இலங்கை தேசிய கவி சம்மேளனம் 2013 ஆம் ஆண்டு நடத்திய விருது விழாவில் காவிய பிரதீப (கவிச்சுடர்) பட்டம் வழங்கி இவரை கௌரவித்தது

2016 ஆம் ஆண்டுக்கான தடாகம் விருது விழாவில் தமிழ் மாமணி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

2018 ஆம் ஆண்டு சப்ரகமுவ மாகாணத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பணப்பரிசும், விருதும் வழங்கப்பட்டது.

2020ஆம் ஆண்டிற்கான அரச கலாபூசணம் விருதும் பணமும் வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

ஏலவே சுட்டியது போல இவரது சிறுகதைகள் அனைத்தும் கற்பனைக் கதைகள் அல்ல. உண்மைச் சம்பவங்களை வைத்தே அதிகமான

மீதும் அளப்பெரிய மதிப்பையும் அன்பையும் விதைத்தது. அதன் பின்னர் தொலைபேசியோடு அந்த நட்பும் உறவும் சுருங்கிப்போனது . அந்த சுலைமா தாத்தாவின் மரணச்செய்தி மனசை வலிக்கச்செய்தது உண்மையில் இவர்கள் ஒரு ஆதர்ச தம்தம்பதிகள் ஆவார்கள்.

ஈழத்து தமிழ் இலக்கியப்பரப்பானது மிக நீண்ட நெடிய வரலாற்றை கொண்டதாகும். அதில் அவ்வப்போது பெண் எழுத்தாளர்கள் தோன்றுவதும் விரைவில் இலக்கிய புலத்தைவிட்டு காணாமல் போவதும் ஈழத்து இலக்கிய வரலாற்றை நிதானமாக ஆரா ய்கின்றவர்களுக்கு மிகத்தெளிவாக அறி ந்துகொள்ள முடியும் ஆனால் சில பெண் எழுத்தாளர்கள் தமக்குக்கிடைக்கின்ற சிறிய வாய்ப்பை பயன்படுத்தி எழுத்துலகில் தமக்கான தனித்துவமான அடையாளத்தை ஆழமாக பத்தித்து வந்துள்ளனர், வருகின்றனர் அந்த வகையில் முஸ்லிம் பெண்களின் இலக் கியப்பங்களிப்பானது குறிப்பிடத்தக்க அளவில் அடையாளப்படுத்த முடியும்.

குடும்பம், இலக்கியம் என்ற இரண்டு தலங்களையும் சமாந்திரமாக பக்குவத்துடன், அதிகபட்ச விட்டுக்கொடுப்புடனும் கொண்டு நடாத்தும் பல பெண்கள் இருக்கிறார்கள்.

அறிய முடிகிறது.

சுலைமாசமி இக்பாலின் எழுத்துலக பயணமானது மிகவும் அவதானத்திற்குரியதாகும். அவ்வாறே அவரது இலக்கியப் படைப்புக்களும் நீண்ட ஆய்வுக்குற் படுத்த வேண்டியவைகளாகும். தர்கா நகரில் பிறந்து கடந்த 30 வருட காலமாக மாவனெல்லையில் வசித்து வந்தவர் எழுத்தாளர் சுலைமாசமி இக்பால். எழுத்துலகில் தனித்துவமான போக்கை கடைப்பிடித்து மிளிர்ந்தவர்

இலக்கியப் பரப்பில் கவிதை,கட்டுரை, சிறுகதை, நாவல், பத்தியெழுத்து, சிறுவர் இலக்கியம் என எல்லா தலங்களிலும் பயணித்தவர்.பல இலக்கியப்போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களையும், தங்கப்பதக்கத்தையும், வென்றவர்.

சுலைமாசமியின் எழுத்துக்கள் வீரியமிக்கவை சமூக அவலங்களை அடையாளப்படுத்தி அதற்கான தீர்வுகளை காத்திரமாக முன்வைப்பவை இதனால் இவரது எழுத்துக்களுக்கு நிலையான வாசகர் வட்டமொன்று எப்போதுமே இருந்து வருகிறது. ஜனரஞ்சகமிக்க எழுத்தாளுமை என்பதனால் இவரது எழுத்துக்கள் எல்லாத்தரப்பினராலும் ஆராதிக்கப்படுகின்றன. இவரது கணவர் இக்பால் மௌலவி

இருவட்டுக்களில் இவரது புத்தகங்கள் முதன்மையானவை என நினைக்கிறன்..

1997ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடளாவிய ரீதியில் ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது. அதற்கு இவர் எழுதிய "திசை மாறிய தீர்மானங்கள் " என்ற சிறுகதை முதலிடம் பெற்றதோடு. அன்றைய முஸ்லிம் காங்கிரசின் தலைவரான எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் கரங்களினால் சான்றிதழையும் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார். அன்று பெற்றுக்கொண்ட தங்கப்பதக்கமானது உண்மையான தங்கம் என்று அவரது குறிப்பொன்றில் காணக்கிடைத்தது. இந்த சிறுகதைக்கான கருவை தனது துணைவர் இக்பால் மௌலவியே தனக்கு தந்ததாகவும் அது ஒரு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது என்றும் அவரது குறிப்பில் பதிந்துள்ளார்.

இதுவரைக்கும் ஆறு நூல்களை இலக்கிய உலகிற்கு தந்துள்ள இவர் இவரது கணவரின் அனுசரணையில் இவரது நூல்களை வெளியிட வேண்டுமென்ற நோக்கத்தில் எக்மி பதிப்பகத்தை உருவாக்கி இவரின் நூல்களையும், இவரது மகள் இன்ஷிறாவின் 2 நூல்களையும், பிரபல நாவலாசிரியை

கதைகளை எழுதியுள்ளார் என்பதை இவரது கதைகளை ஒருசேர வாசிக்கும் போதும் வாசகர்களால் உணர்ந்து கொள்ளமுடியும் .

இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் தமது தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக இவரதும்,இவரது மகள் இன்ஷிரா இக்பாலினதும் சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என்பவற்றை ஐந்து மாணவர்கள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவே இவரது எழுத்துறையில் இவரது அடைவுகளை அடையாளப்படுத்த போதுமான சான்றாகும்.

கடைசியாக சுலைமாசமி எழுதிய "உண்டியல்" சிறுகதைத் தொகுதி வாசகர் மத்தியில் பலத்த வரவேற்பையும், சமூக அதிர்வையும் உண்டுபண்ணிய தொகுதி என்றால் அது மிகையாகாது. சீறிய எழுத்தின் மூலம் சமூகத்தில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என அவர் நம்பினார். ஈழத்து முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் முன்வரிசையில் வைத்து பேசப்படுவார் சுலைமா சமி தாத்தா. அவரது இழப்பு பேரிழப்பாகும்.

எல்லாம் வல்ல இறைவன் அவரை சமூக எழுத்துப்பணியை பொருந்தி அவருக்கு ஈடேற்றத்தை தருவானாக.

# மீண்டும் அது வந்துவிட்டது

அடித்து விரட்ட முடியாத
அதிசயம் அது
வெறுத்து ஒதுக்க முடியாத
வேதனை அது
பூட்டிவைத்த வீட்டுக்குள்
பூனைபோல் புகுந்து
எதையோ தேடுகிறது
எல்லா அறைகளுக்குள்ளும்
எட்டிப்பார்த்து
ஆக்கிரமித்துக் கொள்கிறது
எதையும் விட்டு வைப்பதாயில்லை
எதிரிமீது அடர்ந்தேறும்
போர்வீரனாய் வேகமாய்
படர்கிறது
சேமித்த புத்தங்களை
சோதித்துப் பார்க்கிறது
பிள்ளைகளின் புத்தகப்பையினுள்
நுழைந்து எதையோ தேடுகிறது
படுக்கையறையில் நுழைந்து
பதுங்கிக் கொள்கிறது
சமயலறை சட்டி பானைகளை
விட்டு வைப்பதாயில்லை
எட்டிப்பார்த்து
இறங்கித்தேடுகிறது
கள்வனைத்தேடும் காவலனாய்
கண்ட இடமெல்லாம்
வசப்படுத்தி
வளைத்துப்போட்டுவிடுகிறது

சின்ன மகள்
அவளுக்கு பிடித்தமான
பொம்மையை
பத்திரப்படுத்திக்கொண்டாள்
மூத்தவள் அவளுக்கு
அவசியமானவற்றை
எடுத்துக் கொண்டாள்
மனைவிக்கோ திண்டாட்டம்
எதை எடுப்பது எதை விடுவது
அயல்வீடுகளில் ஆரவாரம்
வேகமாம் முன்னேறும்
இந்தச்சோதனையை
எப்படிக்கடப்பது......

தடுத்து நிறுத்த முடியாத
தலைவிதி இதுவென்று
முன்வீட்டில்
முணுமுணுக்கும் சத்தம்
தவிப்பாய் வெளியேறிது

எத்தனை நாட்களுக்கு
இங்கே தங்கப்போகிறதோ
இதுவரை நான்கு அடிகள்
உயரத்தில்
இன்னும் எத்தனை அடிக்கு
ஏறிப்பார்க்க உத்தேசமோ!

என் கவலையெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்
நான் நேசிக்கின்ற
புத்தகங்களை பற்றி மட்டுமே...

அபூ செய்னப்
(மல்வானையிலிருந்து.....)







குருநாகல் நகர் சிவில் சமூக அமைப்புகள் இணைத்து சுதந்திர பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஆதரவு தெரிவித்து குருநாகல் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் முன்பாக "இனப்படுகொலையை நிறுத்து, சுதந்திர பாலஸ்தீனத்தை வழங்கு" எனும் தொனியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது குருநாகல் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் மொஹினுதீன் அஸார்தீன் சமுகப் பணியாளர் நஸார் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள் – இக்பால் அலி)

# சீனா – தாய்வான் போர் பதற்றம்
# சர்வதேச அளவில் ஏற்படும் விளைவுகள்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

தாய்வானைச் சுற்றி சீனா போர்ப் பயிற்சி நடத்தியது பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ள நிலையில், இரு தரப்பிற்கும் இடையே என்ன மோதல்..

தாய்வானில் புதிய அதிபர் வில்லியம் லாய் பதவியேற்ற சில நாட்களில், தாய்வான் தீவைச் சுற்றி பெரியளவில் சீனா ராணுவ பயிற்சிகளை மேற்கொண்டது. தாய்வான் மீது முழு வீச்சில் தாக்குதல் நடந்தால் எப்படி இருக்கும் என்பதை விளக்கி அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்தப் பயிற்சிகள் அனைத்தும் எழுப்பும் முக்கிய கேள்வி என்னவென்றால், சீனாவுக்கும் தாய்வானுக்கும் உள்ள பிரச்சினை என்ன.. தாய்வான் மீதான சீனாவின் உரிமைகோரல் என்ன என்பதைச் சுற்றித் தான் இருக்கிறது.

சீனா நிலைப்பாடு: சீனா இந்த தாய்வான் தீவைப் பிரிந்து இருக்கும் ஒரு மாகாணமாகப் பார்க்கிறது.. பிரிந்து சென்றாலும் அது தனது நாட்டின் ஒரு பகுதி என்றே சீனா பார்க்கிறது.. தாய்வானைத் தன்வசப்படுத்த ராணுவத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்பதை வெளிப்படையாகச் சொல்லச் சீனா தயாராக இல்லை.

ஆனால், தாய்வானில் மக்கள் மனநிலை நேர்மாறாக உள்ளது. தாய்வான் மக்கள் தங்கள் தனி நாட்டில் இருப்பதாகவே கருதுகின்றனர்.. இப்போது இருக்கும் சூழலே நீடிக்க வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். சரி இரு தரப்பிற்கும் இடையே இப்படி இடியாப்ப சிக்கல் இருக்கிறது என்றால்.. இதன் வரலாறு என்ன என்ற கேள்வி உங்களுக்கு வரலாம்.. இதற்கான பதிலை நாம் பார்க்கலாம்.

தாய்வான் வரலாறு: தாய்வானின் நாட்டிற்கு முதலில் வந்தவர்கள் தற்போதைய தெற்கு சீனாவிலிருந்து வந்தவர்கள் என்று கருதப்படுகிறது. ஏசு பிறப்பிற்கு முந்தைய யுனு239இல் இந்த தாய்வான் தீவு குறித்து சீனாவின் ஆவணங்களில் குறிப்பிடப்படுகிறது. தாய்வான் சீனாவின் ஒரு பகுதி என அவர்கள் கூற இந்த ஆவணம் முக்கியமானது.

டச்சு வசம் சென்ற தாய்வான் கொஞ்சக் காலத்திலேயே மீண்டும் சீனாவின் கிங் மன்னரிடம் வந்தது.. முதல் சீன-ஜப்பானியப் போருக்குப் பிறகு அது ஜப்பான் வசம் சென்றது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியடைந்த நிலையில், தாய்வான் மீண்டும் மெயின்லேண்ட் சீனா வசம் சென்றது.. அப்போது அமெரிக்கா, இங்கிலாந்து என அனைத்தும் இதனைத் ஏற்றன.

ஆனால், அடுத்த சில ஆண்டுகளில் சீனாவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அப்போதைய தலைவர் சியாங் காய்-ஷேக்கின் படைகளை மாவோ கம்யூனிஸ்ட் இராணுவம் தோற்கடித்தது. இதையடுத்து சியாங் அவரது ஆதரவாளர்கள் 15 லட்சம் பேருடன் 1949இல் தாய்வானுக்குத் தப்பிச் சென்றனர்.

1980கள் வரை தாய்வானில் தனியாக சியாங் சர்வாதிகார ஆட்சியை நடத்தினர். அவரது மறைவுக்குப் பிறகு தாய்வான் மெல்ல ஜனநாயகத்திற்குத் திரும்பியது.. அங்கு 1996இல் முதல் தேர்தல் நடந்தது.. அதன் பிறகே சர்வதேச நாடுகள் தாய்வானை ஏற்றுக் கொள்வதிலும் சிக்கல் ஏற்பட்டது.

உலக நாடுகள்: தொடக்கத்தில் தாய்வானில் வாழ்ந்த சியாங் அரசையே அதிகாரப்பூர்வ சீனாவாக உலக நாடுகள் கருதினர். ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் கூட சீனாவின் இடம் சியாங் தரப்பிற்கே வழங்கப்பட்டு இருந்தது. ஆனால், 1970களில் நிலைமை மாற தொடங்கியது. சீனாவின் பிரதான நிலப்பகுதியில் வாழும் மக்களின் பிரதிநிதியாக சியாங் தரப்பைக் கருதப்பட முடியாது என்று முதலில் சில நாடுகள் கூறின. 1971இல் ஐநா சீனாவுக்கு அங்கீகரிக்கத் தொடங்கியது.

1978இல் அமெரிக்கா அதை அங்கீகரித்தது. தொடர்ந்து 1979இல் சீனாவுடன் தூதரக உறவையும் ஆரம்பித்தது.. அமெரிக்காவைத் தொடர்ந்து பல நாடுகளும் தாய்வானை அங்கீகரிக்க மறுத்தன. இப்போது வெறும் 12 சிறிய நாடுகள் மட்டுமே தாய்வானைத் தனி நாடாக அங்கீகரித்துள்ளன.

சீனா தாய்வான் உறவு எப்படி: 1980களுக்கு பிறகு சீனா தாய்வான் இடையேயான உறவுகள் மேம்படத் தொடங்கின. குறிப்பாக 1991இல், சீனா மெயின்லேண்ட் உடன் போர் முடிந்துவிட்டதாகத் தாய்வான் அறிவித்தது. அப்போது ஹாங்காங்கை போலவே "ஒரு நாடு, இரண்டு சிஸ்டம்" என்ற முறையில் தாய்வான் வரலாம் என்று சீனா ஒரு யோசனையை முன்மொழிந்தது.. இருப்பினும், சில காரணங்களால் இதைத் தாய்வான் நிராகரித்தது. இதனால் ஆத்திரமடைந்த இதனால் ஆத்திரமடைந்த மெயின்லேண்ட் சீனா, தாய்வானின் அரசைச் சட்டவிரோதமானது என்று அறிவித்தது. இருப்பினும் இரு தரப்பிற்கும் இடையேயான பேச்சுவார்த்தை தொடர்ந்தது.

2000ஆம் ஆண்டில், தாய்வான் அதிபராக சென் ய்-பியான் அதிபராகத் தேர்வான போது தான் சீனா கோபமடைந்தது. ஏனென்றால் இந்த சென்னின் ஜனநாயக முற்போக்குக் கட்சி தாய்வான் "சுதந்திரத்தை" வெளிப்படையாக ஆதரித்தது. 2004இல் சென் மீண்டும் அதிபராகத் தேர்வான போது.. தாய்வான் சீனாவிலிருந்து பிரிந்து செல்ல முயன்றால் ராணுவத்தைப் பயன்படுத்தலாம் என்ற சட்டத்தைச் சீனா இயற்றியது. இடையில் சீன ஆதரவு கட்சியின் ஆட்சி தாய்வானில் அமைந்ததால் நிலைமை கொஞ்சம் சீரானது.

இருப்பினும், 2016இல், டிபிபி கட்சியைச் சேர்ந்த சாய் இங்-வென் அதிபராகத் தேர்வான பிறகு நிலைமை மீண்டும் மோசமானது. ஏனென்றால் தாய்வான் ஏற்கனவே ஒரு சுதந்திரமான நாடு என்பதை வெளிப்படையாகச் சொன்னவர் சாய்.. இதனால் இதனால் சீனா பேச்சுவார்த்தையைக் கூட நிறுத்திக் கொண்டது. இப்போது இந்த சாய் இங் வெனின் துணை அதிபராக இருந்த வில்லியம் லாய் அதிபராகத் தேர்வாகியுள்ள நிலையில் தான், சீனா இந்த புதிய போர்ப் பயிற்சியை மேற்கொண்டுள்ளது.

இந்த விவகாரத்தைப் பொறுத்தவரை அமெரிக்கா இப்போது மெயின்லேண்ட் சீனாவைத் தான் ஆதரிக்கிறது. சீனா என்று அவர்கள் பெய்ஜிங் தரப்பை மட்டும் அங்கீகரிக்கிறார்கள். ஆனால், தாய்வானையும் கூட சீனா தொடர்ந்து ஆதரித்தே வந்துள்ளது. தாய்வானுக்குத் தற்காப்பு ஆயுதங்களை வழங்க வேண்டும் என்பது அமெரிக்காவின் சட்டத்திலேயே இருக்கிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்கா தாய்வானுக்கு ராணுவத்தை வழங்கி வருகிறது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா தாய்வானைத் தனி நாடாக அங்கீகரிக்கவில்லை என்றாலும் சீனா தாக்குதல் நடத்தினால் தாய்வான் அதை எதிர்கொள்ள ஆயுதங்களை வழங்கி வருகிறது.

இதற்கு இடையில் தாய்வான் அதிபர் சீன அரசாங்கத்திற்கு எதிரான குரலை உற்சாகமாக எழுப்ப பிரச்சினை தற்போது வலுவான நிலையை அடைந்து வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. அவரது சீனா எதிர்ப்பு குரல் சீனாவை வெகுவாக சினம் அடைய வைத்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்நிலையில் தாய்வானை சீனா தற்போது சுற்றி வளைத்திருக்கிறது. கடந்த மாதம் , SU-30, J-16 மற்றும் KJ-500 உட்பட மொத்தம் 49 சீனாவின் ராணுவ போர் விமானங்கள் தாய்வானை சுற்றி நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல 19 போர் கப்பல்களும் தைவனை சுற்றி நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இது தவிர 7 சீன கடலோர காவல்படை கப்பல்களும் தாய்வானை சுற்றி இருக்கின்றன.

இது குறித்து கூறிய தாய்வான் பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறுகையில், "நாங்கள் நிலைமையை உண்ணிப்பாக கவனித்து வருகிறோம். தாய்வான் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்திருக்கிறது.

சீனாவின் இந்த எதிர்ப்பு மற்ற நாடுகள் தாய்வான் உடன் ராஜதந்திர உறவை மேம்படுத்தும் முன்பு பல முறை சிந்திக்க வைக்கும். ஏனென்றால், அனைத்து நாடுகளுக்கும் அமெரிக்காவைப் போலச் சீனாவின் ராணுவ பலத்தை எதிர்கொள்ளும் திறன் இருக்காது. சீனா உடனான வர்த்தகம் மிக முக்கியம் என்பதால் ஐரோப்பா நிச்சயம் இந்த விவகாரத்தில் தலையிடாது.

இரு வல்லரசு நாடுகளுக்கு இடையேயான மோதலின் நடுவே சிக்கிக் கொண்டால் என்ன நடக்கும் எனத் தெரியும் என்பதால் பெரும்பாலான தென்கிழக்கு ஆசிய நாடுகளும் இந்த விவகாரத்தில் நிச்சயம் அணிசேரா கொள்கையையே எடுக்கும்.

இந்த நிலையில் சீனா-வுக்கு செக் வைக்கும் வகையில் தாய்வான் நிறுவனங்கள் முக்கிய ஏற்பாடுகள் செய்துள்ளது. மேலும் சீனா தாய்வான் மீது போர் தொடுத்தால் ஒன்னும் கிடைக்காது என்ற கையில் அமெரிக்கா துணையுடன் பெரும் தொழிற்சாலைகள் ரகசிய முன்னேற்பாடுகள் செய்து வருகிறது.

தாய்வானின் புதிய அதிபர் பதவியேற்றியதை தொடர்ந்து, சீனாவை மிரட்டலை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், தாய்வானின் ஜனநாயகத்தை மதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அவர்களின் இந்த பேச்சுக்குச் சீனா உடனடியாக பதிலளித்தது. "தாய்வான் தனிநாடு என்பது ஒரு முட்டுச்சந்து" என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் இரு நாடுகள் மத்தியில் பதற்றமான சூழ்நிலை தொடர்ந்து நீடிக்கிறது.

இந்த நிலையில் தாய்வான் மீது சீனா படையெடுக்க முயற்சி நடந்தால், அங்குள்ள மிகவும் சிக்கலான மற்றும் உலகில் வேறு எங்கும் இல்லாத சிப் தயாரிப்பு இயந்திரங்களைத் தொலைவிலிருந்தே செயலிழக்கச் செய்யும் திறன் அந்நாட்டில் இயங்கி வரும் நெதர்லாந்தைச் சேர்ந்த யுளுஆடு உழடனபைெ ஏே மற்றும் தாய்வான் நிறுவனமான வுயறையெ ளுநஅஉைழனெரஉவழச ஆயரெகயஉவரசபைெ ஊழஅியலெ (TSMC) ஆகிய நிறுவனங்களுக்கு உள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

தாய்வான் உலகளாவிய அளவில் செமிகண்டக்டர் (Semiconductor) விநியோக சங்கிலியில் மிகப்பெரிய ஆதிக்கத்தைச் செலுத்தும் காரணத்தால், தாய்வான் மீது சீனாவின் படையெடுப்பு பெரிதும் பாதிக்கும் என்ற அச்சம் உலகளவில் எழுந்துள்ளது.

உலகின் மிகவும் மேம்பட்ட சிப் தயாரிப்பு தொழில்நுட்பத்தில் முன்னோடியாகத் திகழும் யுளுஆடு நிறுவனத்தின் EUV (Extreme Ultraviolet Lithography) இயந்திரங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த இயந்திரங்களை வாங்கும் முதன்மை வாடிக்கையாளர்களில் ஒன்றாக வுளுஆஊ நிறுவனம் இருக்கிறது.

தாய்வான் நிறுவனம்: வுளுஆஊ நிறுவனம் உலகின் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட மிகவும் மேம்பட்ட சிப்களை உற்பத்தி செய்கிறது. எனவே, தாய்வான் மீது படையெடுப்பு நடந்தால், உலகளாவிய அளவில் தொழில்நுட்ப சந்தை பெரும் பாதிப்பைச் சந்திக்க நேரிடும்.

அமெரிக்க அரசாங்கம் இந்த சூழலைத் தீவிரமாகக் கவனித்து வருகிறது, தாய்வான் மீதான படையெடுப்பு நடந்தால், அது உலகளாவிய செமிகண்டக்டர் விநியோக சங்கிலியை முற்றிலுமாக சீர்குலைத்துவிடும் என்று அமெரிக்க அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

சீனா நீண்ட காலமாகத் தாய்வான் நாட்டை தனது சொந்தமானது என கருதி வருகிறது. ஆனால், தாய்வான் தனிநாடாகவே இருக்க விரும்புகிறது. இந்த பிரச்சினை காரணமாக, இரு தரப்பினரும் பதற்றமான நிலையில் இருந்து வருகின்றனர்.

இது முழுமையான உளவியல் சிக்கலை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக நம்பப்படுகிறது. இதனைத் தொடர்ந்து சீன அரசாங்கத்திற்கு சொந்தமான கப்பல்கள் தாய்வான் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தீவு பகுதிகளை சுற்றி வளைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது குறிப்பிடத்தக்கது. சீனாவின் போர் விமானங்கள் அந்த பகுதியில் சுற்றி வளைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த பிராந்தியத்தில் பதட்டம் நிச்சயமாக அதிகரித்து வருவதை தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது என்பதே உண்மையாகும்.

இந்த பதட்டத்திற்கு இடையே சீன கடற்படை அதிகாரி லீ ஜே மிகவும் கடுமையாக தாய்வானை எச்சரிக்கை செய்துள்ளதாக தகவல்கள் வெளியானது. ஆகவேதான் அங்கு ஒரு விதமான போர் பதட்டம் நிலவுகிறது.

உலகம் சமீபத்திய காலங்களில் இது போன்ற உக்கிரமான நிலையை கண்டது இல்லை என்பதே உண்மையாகும். ரஷ்யா, உக்ரைன் போர் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இஸ்ரேல் -ஹமாஸ் மற்றும் ஈரான் தொடர்புடைய கிழக்கு ஆசியா போர் மேகங்கள் திரண்டு வந்து கொண்டு இருக்கிறது.

பல தசாப்தங்களாக தொடர்ந்து வரும் இந்த பிரச்சினை தாய்வானை தாய்வானை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தி இருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. தாய்வான் எல்லா நிலைகளிலும் சீன நாட்டுடனான உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்று விரும்புகிறது. அது ராஜ்ய மற்றும் வியாபார மட்டத்தில் இருந்த போதிலும் தான் ஒரு இறையாண்மை கொண்ட தேசமாகவே இருக்க வேண்டும் என்பதே அவர்களின் திட்டமான கோரிக்கை ஆகும். ஆனால் எந்தவொரு நிலையிலும் சீனா இதற்கு உட்பட மறுக்க நிலைமை கட்டுக்கடங்காமல் போகும் போல் தெரிகிறது. குறிப்பாக தொடர்ந்து வரும் இது போன்ற பதட்டங்கள் மூலம் தாய்வான் விழித்து கொண்டு தூங்காத இரவுகளாக காலத்தை நகர்த்தி கொண்டு வரும் நிலையில் அந்த பிராந்தியத்தில் வாழும் மக்கள் பதட்டம் அடைந்து வருவதும் இயற்கை நிலையான ஒன்று என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே கிடையாது.

# இந்திய பொதுத் தேர்தல் முடிவும்

# இலங்கையில் ஜனாதிபதி தேர்தலுக்கான அழுத்தமும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

பாரத தேசத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 ஆசனங்களுடன் மீண்டும் ஆட்சி அமைத்திருக்கின்றது. ஏற்கனவே 10 வருடங்கள் ஆட்சி நடத்திய பி.ஜே.பி. கூட்டணி மீண்டும் ஐந்து வருடங்களுக்கு ஆட்சி செய்யும் வரத்தை இந்திய மக்கள் வழங்கி உள்ளனர். அதன்படி இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜெவஹர்லால் நேருவின் பின்னர் இந்தியாவில் மூன்றாவது முறையும் பிரதமராகும் வாய்ப்பை நரேந்திர மோடி பெற்றுக் கொண்டுள்ளார். இந்தியாவின் 18 ஆவது பாராளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் புதிய அமைச்சரவை அமைய பெற்றது.

மோடியின் தலைமையிலான பி.ஜே.பி. கூட்டணியை தோற்கடித்து ஆட்சியை பிடிக்கலாம் என்று மோடியை எதிர்த்து போட்டியிட்ட எதிரணியான ராஹுல் காந்தி தலைமையிலான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை பிரதானமாகக் கொண்ட "இந்தியா: (I.S.I.A.) என்ற கூட்டணியால் ஆட்சி அமைப்பதற்கு தேவைப்படும் 273 ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதால் இம்முறையும் காங்கிரஸ் கூட்டணி கோட்டை விட்டுவிட்டது. அந்த கூட்டணி 240 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இந்திய பாராளுமன்றத்தில் மொத்த ஆசனங்களின் எண்ணிக்கை 543 ஆகும் ஆகும். இதில் 273 ஆசனங்களைப் பெறும் கட்சியே ஆட்சி அமைக்க முடியும். அந்த அடிப்படையில் பார்க்கும் போது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மேலும் 05 வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. காங்கிரஸ் கிடைத்த 240 ஆசனங்களும் மேலும் 33 ஆசனங்களை திரட்டி சிறிய கட்சிகளை ஒன்று சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்கு போதுமான ஆசனங்களை பெற்ற கட்சிகளை தேட முடியவில்லை. அதனால் மோடிக்கே அதிஷ்டம் அடித்தது.

எதுவானாலும் கடந்த பொதுத் தேர்தலில் கடுமையான பின்னடைவை கண்டிருந்த ராஹுல் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி இம்முறை தனித்து 90 ஆசனங்களை பெற்று அதன் கூட்டணியோடு பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை பெற்றிருப்பது இந்திய தேர்தலில் புதிய மாற்றத்தை காட்டுவதாக இருக்கின்றது. அத்துடன் 400 ஆசனங்களுடன் ஆட்சி அமைப்போம் என்று பிரச்சாரங்களை முன்னெடுத்த பாராதீய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி அருதிப் பெரும்பான்மை பலத்தை பெறவில்லை. கணிசமான பின்னடைவை சந்தித்திருக்கின்றது. இந்த நிலை ஏற்பட காரணம் அந்த கூட்டணியுடன் இணைந்திருந்த சில கட்சிகள் பி.ஜே.பி. தலைமையில் கடைபிடித்த முஸ்லிம் விரோத செயற்பாடுகளாகும். முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாநிலங்களில் மோடிக்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பி இருந்தது. அதனால் இம்முறை மோடியின் தலைமையிலான பி.ஜே.பி கூட்டணி ஆட்சி கவிழும் என்றிருந்த நிலையில் தான் மீண்டும் ஐந்து வருடங்களுக்கு அதே ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள முடிந்திருக்கின்றது.

இந்தியா இலங்கைக்கு மிகவும் நெருக்கமான அயல் நாடாகும் இலங்கை எத்தகைய நெருக்கடிகளை சந்தித்தாலும், பிரச்சினைகளை எதிர் கொண்டாலும் அவசரமாக ஓடி வந்து நேசக்கரம் நீட்டும் இலங்கையின் துயரங்களில் பங்குகொள்ளும் பிரதான நாடாக இந்தியா இருந்து வருகின்றது. 2019 ஆம் ஆண்டின் பின்னர் கோதாபய ஆட்சியால் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் சிரமப்பட்ட நிலையை கண்டு அவசரமாக இலங்கைக்கு போதுமான கடன் உதவிகளை வழங்கி நெருக்கடியை சமாளிப்பதற்கு உதவியதை நாம் மறந்து விட முடியாது. அந்த உதவிகளை செய்தது இதே மோடியின் அரசாங்கமாகும். அந்த வகையில் அயல் நாடான பாரதத்தில் ஏற்கனவே இலங்கைக்கு பரிச்சயமான தலைவரின் கீழ் ஆட்சி அமைந்திருப்பது இலங்கைக்கு மகிழ்ச்சியை தருவதாக இருக்கின்றது இலங்கையின் நம்பிக்கையை மேலும் வலுவடையச் செய்வதாக இருக்கின்றது.

ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் இலங்கையின் உள் விவகாரங்களில் மூக்கை நுழைத்து அரசியல் நெருக்கடிகள், பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் புதிய பிரச்சினைகளை உருவாக்குவது போன்ற விவகாரங்களில் இந்தியாவின் பங்கு மறைமுகமாக இருந்து வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றதையும் நாம் மறந்து விட முடியாது. அண்மையில் இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் இந்தியாவில் கைதான போது அவர்கள் பற்றி விடயங்களை இலங்கைக்கு தெரிவித்தமையில் இந்தியா புதிய பிரச்சினையை உருவாக்குவது போன்று தென்பட்டது.

ஏற்கனவே 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலின் பின்னர் இஸ்லாமிய பயங்கரவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற விடயங்கள் இலங்கையின் பிரதான இனமான சிங்கள மக்களது மனங்களில் மிக மோசமாக வேரூன்றி இருந்த நிலையில் 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தோடு ஓரளவுக்கு மறக்கப்பட்ட விடயமாகிக் கொண்டு வந்த நிலையில் அந்த விவகாரங்களை மீண்டும் கிளறி அதே அச்சத்தை மீண்டும் ஏற்படுத்துவதாக இந்த 04 பேரின் கைது பற்றிய விவகாரத்தை இந்தியா இலங்கைக்கு அறிவித்த விதம் அமைந்திருந்தது.

ஆனாலும் இலங்கையின் புலனாய்வுத் துறையினர் குறித்த நான்கு பேரும் இலங்கை உட்பட வெளிநாடுகளுக்கு சூட்சுமமான முறையில் போதைப் பெருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடக் கூடியவர்கள் என்றும் அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற மத்திய கிழக்கு பயங்கரவாதத்துடன் தொடர்பு வைத்தவர்கள் என்பதற்கான போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதை இலங்கை புலனாய்வுத் துறை அறிவித்திருக்கின்றது. இந்த விவகாரம் தற்போதைய நிலையில் இங்கு பூதாகர பிரச்சினையாக காட்ட முற்பட்டமைக்கு காரணம் எதிர் வரும் செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாத்தில் இங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இந்தியா இவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதிகள் என்றும் அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் தகவல் வழங்கியமையாகும்.

இத்தகைய செய்திகள் ஒரு சில சிங்கள ஊடகங்களுக்கு ராஜபக்ஷ குடும்ப அரசியலை ஊக்குவிக்க தீனி போடுவதாக அமைந்துள்ளன. ஏற்கனவே 2019 ஆம் ஆண்டு கோதாபய ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுண கட்சி கூட்டணி இலங்கையில் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையான 155 ஆசனங்களுடன் ஆட்சி அமைக்க காரணமாக அமைந்திருந்தது இத்தகைய முஸ்லிம் விரோத, இஸ்லாமிய பயங்கரவாதம், அடிப்படைவாதம் என்ற நச்சுக் கருத்துக்களாகும்.

இதே போக்கைதான் பாரதத்தில் மோடியின் பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில ஹிந்துத்துவ தீவிரவாத குழுக்களும் செய்து வந்தன. அதனால் இந்தியாவில் சில பிராந்தியங்களில் மோடிக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்பட்டிருந்தது. அந்த வரிசையில் 2022 ஆம் ஆண்டு கோதாபய ஆட்சி கவிழ்ந்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகும் வாய்ப்பு ஏற்பட்டவுடன், இங்கு அரங்கேற்றப்பட்ட இஸ்லாமிய விரோத செயற்பாடுகள் குறுகிய அரசியலை இலக்குவைத்த அரசியல் நாடகம் என்று, சிங்கள மக்களும் புரிந்து கொண்டனர்.. ஆனாலும் தற்போதைய நிலையில் இந்தியாவில் பி.ஜே.பி. மீண்டும் மூன்றாவது முறையாகவும் தேர்தலில் வெற்றிபெற்று அறுதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்திருப்பது இலங்கையில் முன்னைய ஆட்சியாளர்களான ராஜபக்ஷ குடும்பத்திற்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஏற்கனவே பொதுத் தேர்தல்தான் நடத்தப்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுணவின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவுக்கு அழுத்தங்களை கொடுத்து வந்தார். அவர்களது நியமன ஜனாதிபதி பொதுஜன பெரமுண தலைமைப் பீடம் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் என்றும் அதற்கு மாற்றமான முறையில் ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்ததி நடந்து கொண்டால் அதற்கு தகுந்த பாடம் கற்பிப்போம் என்றும் அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர். ஆனாலும் அடுத்து நடக்க இருப்பது பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது தொடர்பாக இன்னும் நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றது. ஆனாலும் அரசியல் அமைப்பின்படி அடுத்து நடத்தப்பட வேண்டி இருப்பது ஜனாதிபதித் தேர்தலாகும்.

இருந்தாலும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழி நடாத்தலிலான ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்த, தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பின்போடுவதற்கான யோசனை பற்றிய கருத்தால் நாட்டில் கடுமையான எதிர்ப்புக்கள் வெளிப்பட்டன. இருந்தாலும் அது பற்றி ஜனாதிபதி எதையும் தெரிவித்திருக்கவில்லை. எப்படியோ மக்களது நிலைப்பாடு எப்படிப்பட்டது என்பதை அறிவதற்காக இவ்வாறான கருத்தை வெளியிட்டிருக்கலாம். ஆனாலும் அந்த யோசனையை அரசியல் கட்சிகள் ஜீரணிக்காததால், எதிர்ப்பை வெளிக்காட்டியதால் அதே ரங்க பண்டார மறுபக்கத்திற்கு பெல்டி அடித்தார். 2024.06.03 ஆம் திகதி அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவரால் முன்வைக்கப்பட்ட கருத்திற்கு விளக்கம் ஒன்றை முன்வைத்தார்.

அரசாங்கம் தேர்தலை பிற்போட இதுவரையில் தீர்மானிக்கா விட்டாலும் அரசியல் அமைப்பில் உள்ள பிரிவுகளின் அடிப்படையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் அடிப்படையில் இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி மக்களது அபிப்பிராயத்தை அறிந்து ஒப்புதலை பெற முடியும் என்பதோடு அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் பற்றி தான் கருத்து வெளியிட்டதாகவும் சமாளித்து விட்டார். அப்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டுமா வேண்டாமா என்று கேட்டு.. வேண்டாம் என்றால் மீண்டும் தேர்தலை நடத்தி ஆட்சியை கைவிடுவதா என்ற பிரச்சினை இந்த கருத்தின் பின்னணியில் வருகின்றது.


எவ்வாறாயினும் அப்படியாக ஒரு சந்தர்ப்பத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமானால் அரசியல் அமைப்பிற்கு திருத்தம் கொண்டவரப்பட்டு அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றி சர்வஜன வாக்கெடுப்புக்கும் விட வேண்டும். அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்திய பின்னர் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தால் அடுத்ததாக முறைப்படி ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும். இது ஒருவகையில் இலங்கை வாழ் வாக்காளர்களின் கண்ணில் மண்ணைய் தூவி ஏமாற்றி ஆட்சியை தக்க வைக்க எடுக்கும் முயற்சியாகும். ஆதற்கான சாத்தியங்கள் இல்லை. ஒதுக்கப்பட்டுள்ள 1000 கோடி ரூபாவை முறையற்றவிதமாக பயன்படுத்தி ஜனநாயக உரிமைக்கு பூட்டுப் போடுவதை விட இலகுவான காரியமாக இருப்பது ஜுலையில் தேர்தல் அறிவிப்பை செய்து ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதாகும்.

பொதுஜன பெரமுண கட்சி அடுத்த ஜனாதிபதி அபேட்சகராக அதன் கூட்டணியால் ரணில் விக்ரமசிங்கவை அங்கீகாரிக்காவிட்டால் ஐ.தே.கட்சி தலைமையில் ரணிலால் கூட்டணி அமைத்து இந்த இரண்டு வருட ஆட்சியில் அவரால் முன்னெடுக்கப்பட்ட சாதனைகளை சொல்ல மீண்டும் ஜனாதிபதியாக வர முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. இதற்காக தற்போது தயார் நிலையில் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அதனை தயார் நிலையில் வைத்தால் அதன் ஆதரவில் ஆட்சியை தக்க வைக்கலாம் என்று ஐ.தே.க. ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வர சஜித் பிரேமதாச இணங்குவாரா என்பது சந்தேகமே. கடந்த நான்கு வருடங்களாக சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபலவேகய கட்சி அதற்கு சாதகமான சிறிய கட்சிகளை ஒன்று சேர்த்து கூட்டணி அமைத்து பலமான ஆட்சியை அமைப்பதை இலக்கு வைத்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அப்படி ஐ.தே.க. வும் சஜித் அணியும் ஒன்றிணைவதாக இருந்தால் ரணில் ஜனாதிபதி பதவியை விட்டுக் கொடுக்க இணங்க வேண்டும். ஆனாலும் ஐ.தே.க. வுக்கு பாராளுமன்றத்தில் ஒரு ஆசன பலத்தை தவிர வேறு ஆசனங்கள் இல்லை. இந்த விட்டுக் கொடுப்பு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக இருக்காததால்தான் ஐ.தே.க. இரண்டாக உடைந்து சஜித் தலைமையிலான புதிய அணி உருவாகியது. புதிய அரசியல் பயணத்தை ஆரம்பித்து இப்போது ஆட்சி கம்பத்தை தொடும் அளவிற்கு முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

இந்த இலக்கை அடைவதற்கு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றது. பிரதான கட்சியாக இருந்த பொதுஜன பெரமுண கட்சி மூன்றாக பிளவுபட்டமை, ஸ்ரீ.ல.சு.கட்சி பலம் இழந்து பிளவுபட்டமை உட்பட அரசியல் அரங்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை சஜித்தின் நம்பிக்கையை வலுவடையச் செய்திருக்கின்றது. ஆனாலும் ஜே.வி.பி. யானது சமகி ஜனபலவேகய கட்சிக்கு மாத்திரமன்றி பொதுஜன பெரமுண மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் சவாலாக அமைவதால் அதன் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முயற்சிகளை மேற்கொள்வது இந்த மூன்று தரப்பினரதும் தேவையாக இருந்து வருகின்றது. இந்நிலையில் இந்தியாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் இலங்கையில் உரிய காலத்தில் தேர்தலை நடாத்தச் செய்வதற்கு ஒரு பலமான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைய இருக்கின்றது. அதற்கான அழுத்தங்கள் எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என்றே கருத முடிகின்றது.

இதற்கிடையில் ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல் காரணமாக நெருக்கடி உருவாகி இருக்கின்றது. மைத்திரிபால சிரிசேனாவினால் தலைமைப்பதவிக்கு சிபாரிசு செய்த நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கே சட்ட சறுக்கல் ஏற்பட்டு தலைமைத்துவ வாய்ப்பு கைநழுவிப் போன கதையாகி இருக்கின்றது. மைத்திரிபால சிரிசேனாவின் அரசியல் எதிர்காலம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றது. அத்துடன் அவரால் வழங்கப்பட்ட மரண தண்டனை கைதிக்கான மன்னிப்பையும் உயர் நீதிமன்றம் இரத்து செய்து அரசியல் அமைப்பை மீறினார் என்ற குற்றச்சாட்டை உர்ஜிதப்படுத்தி இருக்கின்றது. அவர் ஏற்கனவே 52 நாள் அரசாங்கத்தை ஏற்படுத்தியதிலும் அப்பட்டமாக அரசியல் அமைப்பை மீறிவிட்டு மீண்டும் அரசியலில் ஸ்ரீ.ல.சு.கட்சியை வைத்துக் கொண்டு இப்போது விஜேதாச ராஜபக்ஷவுடன் அலைந்து கொண்டிருக்கின்றார். இலங்கையின் அரசியலின் கருப்பு பக்கங்களாக இவை உள்ளமை குறிப்பிடத்தக்கது.









# ஈதுல் அழ்ஹாவை கொண்டாடுவோம்!



பரீட் இக்பால்

தக்பீர் முழங்குகிறது. அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்... லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் ... அல்லாஹு அக்பர்...வலில்லாஹில் ஹம்து

தக்பீர் முழங்குகிறது, ஈதுல் அழ்ஹா உதயமாகிறது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு எத்தனையோ காலங்களாக தமக்கு ஒரு பிள்ளையில்லை என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான ஒப்பற்ற மனதையும் ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம்வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேசளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலியா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது. ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும் போது ஒரு வழியால் சென்று மற்றுமொரு வழியால் திரும்பி வருவார்கள். இதன் மூலம் பலரை சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவி புரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள்.

பெருநாள் தினத்தில் சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்றுகூடல்களை நடாத்தலாம். இதன் மூலம் இரு சாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கி பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.

பெருநாள் தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில் இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

பெருநாள் தொழுகையானது ஆண், பெண் இரு சாராரும் தொழலாம். என்று இஸ்லாம் கூறுகின்றது. மாதவிடாய் உள்ள பெண்களும் பெருநாள் தொழுகை நடக்கும் மைதானத்திற்கு செல்ல முடியும். மாதவிடாய் உள்ள பெண்கள் தொழும் இடத்தை விட்டு விலகி பெண்களின் பின்னால் இருத்தல் வேண்டும். மாதவிடாய் உள்ள பெண்கள் தக்பீர் கூறவும் துஆ கேட்கவும் முடியும்.

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை முடிந்தவுடன் இமாம் நிகழ்த்தும் குத்பா உரையை அனைவரும் கேட்க வேண்டும். தொழுகையை போன்றே குத்பாவும் ஒரு இபாதத் என்பதை மறக்கலாகாது. இவ்வாறு ஒரு இமாமுக்கு கட்டுப்பட்டு நடப்பதன் மூலம் முஸ்லிம் சமுதாய அமைப்பு வலுப்பெறுவதோடு தனிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் பலவகையான நன்மைகளையும் அல்லாஹ்வின் அருளையும் பெறும் வாய்ப்பை பெறுகின்றனர். ஹஜ்ஜுப் பெருநாள் ஒரு தியாகப்பெருநாளாகும் எனவே ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் நபி (ஸல்) அவர்கள் காலைச்சாப்பாடு சாப்பிடாமல் பெருநாள் தொழுகைக்கு புறப்படுவார்கள். எனவே நாம் காலைச்சாப்பாட்டை சாப்பிடாமல் பெருநாள் தொழுகைக்கு புறப்பட வேண்டும். பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு “தகப்பலல்லாஹு மின்னி வமின்க” உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக! என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.

பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டு பேசி உபசரித்து, வாழ்த்துக் கூறி தங்களிடையே பற்றையும் பாசத்தையும் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

புனித ஹஜ் பெருநாள் தினத்திலும் அதைத் தொடர்ந்துவரும் துல்ஹஜ் மாதம் 11,12.13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச் சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர்பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு பிறருக்கும் புசிக்கக் கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ்ஹிய்யா ஆகும்.

ஸகாத் கொடுப்பவர்கள்தான் உழ்ஹிய்யா கொடுக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. வசதியுள்ளவர்கள் அனைவரும் கொடுக்க வேண்டும். ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு பேர் சேர்ந்து கூட்டாக கொடுக்கலாம். இது ஆண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. பெண்களும் தாராளமாக இதில் பங்கேற்கலாம். உழ்ஹிய்யா கொடுப்பவரே அறுப்பது மிகவும் சிறந்தது. அப்படி இல்லையென்றால் வேறொருவருக்கு பொறுப்பு கொடுக்கவும் முடியும். அவர் அந்த இடத்திற்கு சமூகமளிப்பது சிறந்தது. தைரியமிருந்தால் பெண்களும் அறுக்கலாம். அறுப்பதற்கு முன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட வேண்டும். நாம் அறுக்கின்ற போது “பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்” என்று கூற வேண்டும்.

“உங்களில் ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கின்ற நிலையில் துல்ஹஜ் மாதம் பிறந்ததும் நகம், முடி எதையும் வெட்ட வேண்டாம்”. ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கும் நிலையில் நகம் அல்லது முடி ஏதாவது ஒன்றை வெட்டினால் அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில் பிற சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கிய அம்சமாகும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. நம் மதக் கிரியைகளை நிறைவேற்றும் போது பிற மதத்தினரின் அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வது நல்லதல்ல.

மிருகங்களை அறுப்பதற்கும் இறைச்சியைப் பெற்றுகொண்டு சுற்றாடலுக்கு மாசு ஏற்படாத வகையில் கழிவுப்பொருட்களை அழித்தொழிப்பதற்கும் போதிய இடவசதி இருக்கும்வரை இந்த நடைமுறையில் பிரச்சினைகள் தலைதூக்குவதில்லை. பல்லின மக்களும் கலந்து வாழும், இடப்பற்றாக்குறை நெருக்கடி மிக்க பகுதிகளில் மிருகங்களை அறுப்பதும், அவற்றின் கழிவுகளை அப்புறப்படுத்துவதும் எப்போதுமே சர்ச்சைக்குரியனவாகின்றன.

உழ்ஹிய்யா கொடுக்கும் விடயத்தில் பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மிருகங்களை அறுப்பதற்காக கொண்டுசெல்லும் போது அதற்கு இம்சை செய்வதோ, அறுத்ததன் பின் இரத்தம் வடியும் நிலையில் பாதைகளில் இறைச்சியைத் தூக்கிச் செல்வதோ கூடாது. அறுத்த பிராணியின் கழிவுகளான தோல், எலும்புகள், கொம்பு, சாணம் போன்றவற்றை துர்நாற்றம் வீசும் நிலையில் பாதையோரங்களில் வீசுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அவைகளை குழி தோண்டிப் புதைத்து விட வேண்டும். ஆனால் நம் சகோதரர்கள் அவ்வாறு செய்யத் தவறிவிடுகின்றனர். இது கவலைக்குரிய விடயமாக உள்ளது. இது போன்ற தவறுகளை விடுவதால்தான் பிற சமூகத்தினரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதை உழ்ஹிய்யா கொடுக்கும் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்படுவது கட்டாயக் கடமையாகும்.

எமது நாட்டின் இறைச்சிக் கடைகள் தொடர்பான உள்ளூராட்சி அமைப்புகளுக்கான கட்டளைச் சட்டம் அமுலில் உள்ளதோடு அதன் பிரகாரம் இறைச்சியின் பொருட்டு கால்நடைகளைக் கொல்வதற்குப் பாதுகாப்பான கொள்கலன்களிலேயே அறுக்கப்பட வேண்டும் என்ற நியதியும் உண்டு. உழ்ஹிய்யாவின் பொருட்டு மிருகங்களை அறுப்பதற்காக அவ்வப் பிரதேச உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுடன் பேசி, அதற்காக செலுத்த வேண்டிய சிறு கட்டணங்களையும் செலுத்தி, பாதுகாப்பான முறையில் சுற்றாடலுக்கும் சுற்றாடலிலுள்ள பிற சமூகத்தவர்களுக்கும் தொந்தரவில்லாதவாறு இக் கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும்.

இறைச்சிக்காக ஆடு, மாடுகளை கொல்வது எமது நாட்டு சட்டத்திலுள்ள விடயமாகும்.

வீடுகளில் அல்லது வைத்தியசாலைகளில் நோயாளர்களாக துன்பத்துடன் பெருநாளை கொண்டாட முடியாதவர்களாக பெருநாள் பொழுதை கழிக்கிறவர்களிடமும் சிறைச்சாலையில் துன்பப்படும் கைதிகளிடமும் சென்று சந்தித்து சுக துக்கங்களை விசாரித்து உணவுகள், பழங்கள், பலகாரங்கள் வழங்கி மனதிற்கு ஆறுதல் அளிக்கலாம். இலவச வைத்திய முகாம்கள் அமைத்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கலாம்.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். பெருநாள் காலங்களில் கட்டியெழுப்பும் முன்மாதிரியான நிகழ்ச்சிகளை அந்தந்த ஊர்களின் கழகங்கள், ஸ்தாபனங்கள், அமைப்புக்கள் ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் பெருநாளாக அமைய அல்லாஹ்வை வேண்டுகிறோம்.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம் பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.



## மனநலமும் ஆலோசனையும் 35

# தாய்மையும் தியாகமும்

இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் மனைவி ஹாஜர் (அலை) அவர்களையும் மகன் இஸ்மாயில் (அலை) அவர்களையும் பாலைவனத்தில் விட்டுச் சென்ற கதை அனைவரும் அறிந்ததே, ஆனால் அதைக் கேட்கும் ஒவ்வொரு முறையும் எங்கள் உணர்வுகள் ஆடிப் போவதை உணர்கிறோம்.

பாலைவனம் என்பது பூமியின் சூழல்களில் மிகவும் கடினமான, ஆபத்தான சூழல்களில் ஒன்றாகும். அங்கு கடும் நீர் பற்றாக்குறை இருக்கும். வெப்பம் கொடுமையாக இருக்கும். அதன் தோற்றம் கரடுமுரடானதாக இருக்கும். விஷ ஜந்துக்களின் பாதிப்புகள் படு மோசமாக இருக்கும். அவ்வப்போது நிலப்பரப்பின் நிலை மாறும். சில நிமிடங்களில் எவரையும் எந்த ஆபத்தில் வேண்டுமானாலும் சிக்கவைத்து விடும். பாலைவனத்தில் பயணிப்பது வாழ்வது எல்லாம் மிகப் பெரும் போராட்டமாகவே இருக்கும்.

அண்ணை ஹாஜரா அவர்கள் தன் மகன் இஸ்மாயில் (அலை) அவர்களுடன் அரேபியாவின் வரட்டு பாலைவனத்திற்கு மேற்கொண்ட பயணம் எப்படி இருந்து இருக்கும்?

அப்போது மக்கா ஒரு வெற்றுப் பாலைவனமாக இருந்தது. அங்கு யாரும் குடியேறி இருக்கவில்லை. காரணம் அங்கு தண்ணீர் இருக்கவில்லை.

பாலைவனப் பயணத்தின் பயங்கரத்தையும் அதன் நிச்சயமற்ற தன்மையையும் கற்பனையால் கூட விவரிக்க முடியாதாக இருக்கும் போது ஒரு தாய் தன் மகனுடன் தனிமையாக பயணம் செய்ததும் திசை தெரியாத திக்கில் நாற்களை கழித்ததும் அங்கு கண்ட அனுபவங்களும் எப்படி இருந்து இருக்கும்?

நன்கு தெரிந்த, பழகிய சூழலில் இருந்து அனைத்தையும் விட்டுவிட்டு எதுவுமே தெரியாத, பழக்கமே இல்லாத ஒரு இடத்திற்கு செல்வது என்பது எவ்வளவு ஆபத்தானது.

ஒரு சிறிய அளவு உணவும் தண்ணீருடனும் மட்டுமே ஆரம்பித்த பயணம் அது. சுட்டெரிக்கும் கடுமையான பாலைவன வெயிலில் திசை தெரியாமல் போன பயணம் அது.

நாம் என்றால் எப்படி முகம் கொடுத்திருப்போம். பயணத்தின் முடிவு தெரியாமலும் ஆபத்தான பயணம் என்பதை உணர்த்தும் பயணம் செய்த ஹாஜரா அம்மையாரின் இறை நம்பிக்கை அசைக்க முடியாததாக இருந்தது. தனக்கு அல்லாஹ் போதுமானவன் என்றும் பறவைகளுக்கு உணவளிக்கும் அவன் தனக்கும் உணவளிப்பான் என்ற நம்பிக்கை அந்த தாய்மையில் நிறைந்து இருந்தது. தானும் தன் மகனும் பாலைவனத்தில் தனிமையில் இருப்பதாக தோன்றினாலும் அல்லாஹ் மிக அருகில் இருக்கிறான் என்பதை அந்த தாய்மை உணர்ந்திருந்தது.

பயணத்தின் நடுவில் களைப்பும் விரக்தியும் அவர்களை வாட்டி வதைத்த போதெல்லாம் அவர்கள் சற்றேனும் மனம் தளரவில்லை. குடிக்க நீர் இன்றி வற்றி வரண்டு போன நாவுடன் நீர் தேடி சஃபா, மர்வா மலைகளுக்கு இடையில் அவசர அவசரமாக ஓடி ஓடி தண்ணீரைத் தேடினார் தன்னந்தனியாக.

நீரே இல்லாத வரட்டு மண்ணில் நீர் தேடினார்.

அந்த தாயின் அயராத நம்பிக்கையும் விடாமுயற்சியும் அல்லாஹ்வின் கருணைக்கு சான்றான ஸம்ஸம் ஊற்றின் அற்புத வெளிப்பாடு அந்த வரட்டு மண்ணை ஈரமாக்கியது.

இறைவன் மீதான ஒரு தாயின் தரமான நம்பிக்கை வற்றாத நீரூற்றாக வடிவம் பெற்றது. அது வரலாற்று ஊற்றாக இன்றும் ஊறிக் கொண்டே இருக்கிறது.

இந்த ஊற்று இன்று உலகின் எந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கும் சர்வதேச நீர் ஆதாரமாக மாறியுள்ளது.

ஹஜரா அம்மையாரின் கதை காலத்தை கடந்த கதை அல்ல.

அது காலத்தால் வென்ற கதை.

காலத்தை வெல்லக் கற்றுத் தருகின்ற கதை.

அது விசுவாசிகளுக்கு விண்ணை தொடவைக்கும் கதை.

அழகான குடும்ப உருவாக்கத்தில் தாய்மையின் மேன்மையை உணர்த்தும் கதை.

இறைவன் மீதான ஒரு தாயின் உறுதியான நம்பிக்கைதான் அழகான சமூக உருவாக்கத்தின் ஊற்று என்று சொல்லித் தரும் கதை

குறிப்பாக வாழ்க்கை சவால்களை தைரியமாக எதிர்கொள்வதிலேயே வெற்றி இருக்கிறது என்கிற தகவலை ஒவ்வொரு தாய்க்கும் கற்றுத் தருகிற கதை.

ஹாஜரா அம்மையாரின் அற்புதமான தியாகம் ஒவ்வொரு தாயும் தன் பொறுப்பில் உள்ள பிள்ளைகளை, குடும்பத்தை அல்லாஹ்வுக்காக அர்ப்பணிப்புடன் பராமரிப்பதன் மூலம் உலகம் வியக்கும் அற்புதங்களைச் செய்ய முடியும் என்ற உயரிய செய்தியை மிகத் தெளிவாக சொல்லிக் கொண்டே இருக்கிறது.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# இலங்கைக்கு விநியோகம் செய்ய சவூதியின் பேரீத்தம் பழங்கள்

## உலக உணவுத் திட்டத்திடம் கையளிப்பு





மன்னர் சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்களுக்கான மையத்தின் ஒரு குழு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பல பிராந்தியங்களில் விநியோகிப்பதற்கான 300 தொன் பேரீச்சம்பழங்களை உலக உணவுத் திட்டத்திடம் கையளித்தது. இலங்கை குடியரசிற்கான சவூதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி மற்றும் இலங்கையில் உள்ள சர்வதேச உணவுத் திட்டத்தின் துணைப் பணிப்பாளர்ஃ ஜெரார்ட் ரெபெல்லோ மற்றும் மன்னர் சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணங்களுக்கான மையத்தின் பணிப்பாளர் கௌரவ இப்ராஹிம் பின் அப்துல்லா அல்-கலாஃப் போன்றோர் இந் நிகழ்வில் பங்கேற்றனர் .

உலக உணவுத் திட்டமானது இப்பேரீத்தம் பழங்களை 200,000க்கும் அதிகமான பயனாளிகளுக்கு விநியோகிக்கும் நோக்கோடு, இப்பேரீத்தம் பழங்களை, முளுசநடறைக இடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

சவூதி அரேபிய இராச்சியத்தின் மனிதாபிமான மற்றும் முன்னோடி பாத்திரத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கிய இந்த தாராள நன்கொடைக்காக, இரண்டு புனிதத் தளங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் ஆகியோருக்கு, கௌரவத் தூதுவர் அல்கஹ்தானி அவர்கள் தனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டார். மேலும், தேவையுடையோர்களின் துன்பத்தைப் போக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்படும், இதுபோன்ற மனிதாபிமானத் திட்டங்களை செயல்படுத்துவதை நேரடியாக மேற்பார்வையிட்டு வரும் மன்னர் சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரண மையத்திற்கும் கௌரவத் தூதுவர் அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இது தொடர்பாக, உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கௌரவ ஜெரார்ட் ரெபெல்லோ, “இந்தத் தாராளமான பங்களிப்பிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, சவூதி அரபிய இராச்சியமானது இவ் உலக உணவுத் திட்டத்திற்கு, மிகப் பெரிய நன்கொடை வழங்கும் நாடுகளில் சவூதி அரேபியா இராச்சியமும் ஒன்றாகும்” என்றார்.

இரண்டு புனிதத் தளங்களின் பாதுகாவலரின் அரசாங்கத்தால் உலகின் பல்வேறு சகோதர மற்றும் நட்பு நாடுகளுக்கு அங்கு வாழும் மிகவும் தேவையுடைய குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்க்காக வழங்கும் உதவித் திட்டங்களுக்குள் இதுவும் உள்ளடங்கும்.

# தனித்துவ அடையாளங்களுடன் இருப்பதைவிட, தேசிய அடையாளங்களுடன் இருப்பதே பாதுகாப்பானது



**(இக்பால் அலி)**

தனித்துவ அடையாளங்களுடன் ஒதுங்கி இருப்பதை விட தேசிய அடையாளங்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதே இந்நாட்டின் சிறுபான்மை சமூகமான முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பானது என்று வடமேல் மாகாண ஆளுனர் கௌரவ நஸீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார்.

குருநாகல் முஸ்லிம் வர்த்தக அமைப்பின் ஏற்பாட்டில் வர்த்தக பிரமுகர்களுடனான சிநேகபூர்வமான கலந்துரையாடல் குருநாகல் ப்ளூ ஸ்கை ஹோட்டலில் சங்கத்தின் தலைவர் எம். வை. எம். கியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் கலந்து கொண்டு கருத்தைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இலங்கை முஸ்லிம்களின் தேசியத் தலைவர்களாக மதிக்கப்படும் டீ.பி.ஜாயா, சேர் ராசிக் பரீத், பதியூதீன் மஹ்மூத், எம்.எச்.எம். அஸ்ரஃப் போன்றவர்கள் தேசிய அரசியலில் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டதன் காரணமாகவே இன்று நாம் அனுபவிக்கும் உரிமைகளைப் பெற்றுத் தந்தார்கள். அந்த வகையில் தனித்துவ அரசியலை விட தேசிய அடையாளங்களுடனான அரசியலே எமக்குப் பாதுகாப்பானதும், பலன் தரக்கூடியதும் என்று அவர் தெரிவித்தார்.

# போர்வை வெள்ள அனர்த்தத்துக்கு களுத்துறை ஜம்இய்யாவின் உதவிகள்

**(பேருவளை பீ.எம் முக்தார்)**



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் களுத்துறை மாவட்ட ஜம்இய்யா மூலமாக சேகரிக்கப்பட்ட சுமார் பதினைந்து இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களையும் ஐந்து இலட்சம் ரூபா பணத் தொகையையும் தர்ஹா நகர் கிளை உலமாக்களுடாக மாத்தறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் போர்வைப் பள்ளி நிர்வாகத்திற்கு கையளிக்கப்பட்டது.

களுத்துறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சார்பில் அஷ்ஷெய்க் எம். எச்.எம் பர்ஹான் ஹனீபா (நளீமி) பள்ளிவாசல் நிர்வாகியிடம் கையளிப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி ரணில் தலைமையில் நாட்டை முன்னேற்ற முடியும்



## முஷாரப் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு தாக்கங்களினால் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கட்டம் கட்டமாக முன்னிலைக்கு கொண்டுவருவதாகவும் அவர் இன மத பிரதேச வேறுபாடின்றி நாடு என்ற ரீதியில் பணியாற்றி வருவதாகவும் அவரது நிருவாகத்தின் கீழ் நாட்டை முன்னிலைக்கு கொண்டுசெல்ல முடியும் என காரைதீவு பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பிருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் அவர்கள் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நிறுவனங்களுக்கும் நிர்மானங்களுக்குமாக சுமார் பத்து மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார்.

அதன் ஒரு கட்டமாக சமூக சேவை நிறுவனங்களுக்கும் விளையாட்டு கழகங்களுக்கும் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் 2024.06.11 ஆம் திகதி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலக திட்டமிடல் உத்தியோகத்தர் பி. ராஜகுலேந்ரனின் நெறிப்படுத்துதலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பிருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வின்போது காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், அந்நூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் உதவித்தலைவரும் ஜாஹீர் பௌண்டேசன் மற்றும் சமூக அபிவிருத்தி சபையின் ஸ்தாபக தலைவருமான ஏ.எம். ஜாஹீர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஏ.எம். அஷாம் மௌலவி உள்ளிட்ட அதிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

குறித்த நிகழ்வின்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாடு வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருந்த வேளை நாட்டை மீட்ட சிறந்த தலைவராக தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை பார்ப்பதாகவும் அவரது ஆட்சியில் நாட்டை முன்னிலைக்கு கொண்டுசெல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் அவர்களது வேண்டுகோளின் கீழ் சில பணிகளை காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குள் செய்ததாகவும் எதிர்காலத்தில் சம்மந்தப்பட்டவர்கள் என்னிடமே தாங்களது குறைகளை நிவர்த்திக்க முடியும் என்றும் தான் எந்த சந்தர்ப்பத்திலும் இன பிரதேச ரீதியாக செயற்படுபவன் இல்லை என்றும் தெரிவித்தார்.

# மூடப்பட்டிருந்த உப தபால் நிலையத்திற்கு உயிரூட்டிய அலி சப்ரி ரஹீம் எம்.பி.



(எம்.எச்.எம். சியாஜ், எம்.யூ எம் சனூன்)

மாதம்பை பழைய நகரத்தில் உள்ள உப தபாலகம் கடந்த ஒன்றரை வருட காலமாக மூடப்பட்டிருந்ததால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர். இது விடயமாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து குறித்த தபால் நிலையம் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த உப தபாலகம் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் அண்மையில் (12) உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பிரத்தியேக செயலாளர் ஜமால்தீன் ஜவ்ஸி, புத்தளம் மாவட்ட தபால் கண்காணிப்பாளர் எச்.எம்.ஏ.ஜே பண்டார, ஓய்வூதிய சங்கத்தின் தலைவர் எம். நதுன் பெரேரா, மாதம்பை ஜும்ஆப் பள்ளிவால் பரிபாலன சபைத் தலைவர் உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் மாதம்பை பிரதேசவாசிகள் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# MDTU மாகாணப் பணிப்பாளருக்கு மேலதிக ஆணையாளர் பதவி



(அபு அலா)

கிழக்கு மாகாண Management Development Training Unit மாகாணப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்ற என்.எம்.நௌபீஸ் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் பதவியை வகிப்பதற்கான கடிதத்தை நேற்று முன்தினம் (14) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இக்கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. இப்பதவி, கிழக்கு மாகாண Management Development Training Unit மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா – இலங்கை முப்படையினருக்கு ஆயுத உபகரணங்கள் வழங்கி வைப்பு



(அஷ்ரப் ஏ சமத்)

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமான இராஜதந்திர உறவின் 76 வருடங்களை முன்னிட்டு அமெரிக்கா இலங்கை முப்படையினருக்கு ஆயுத உபகரணங்கள் உதவித் திட்டங்களை (12) கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமானப்படை அதிகாரிகளிடம் கையளித்தார்.

இந் நிகழ்வுகள் விமானப்படைத் தளபதி உதயனி ராஜபக்ச மற்றும் அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

அமெரிக்காவிலிருந்து கட்டுநாய்கக விமான நிலையத்தினை வந்தடைந்த லெப்டினட் கேனல் அந்தனி நெல்சன் 3 மில்லியன் அமெரிக்கா டொலர் பெருமதிவாய்ந்த ஆயுதப்படைக்கான உபகரணங்களை கையளித்தார்.

இந் நிகழ்வில் விமானப்படையின் உப தளபதி தேசப்பிரியா சில்வா கலந்து கொண்டார்.

அமெரிக்கா, இலங்கை முப்படையினருக்கு ஆயுத உபகரணங்களை வழங்கியது.

# கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு 15 மில்லியன் நிதி வழங்கி வைப்பு

(எம்.எச்.எம் சியாஜ், எம்.யூ.எம் சனூன்)

கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் என்.டி எம். தாஹிர் பதவியில் இருந்த காலப் பகுதியில் வடமேல் மாகாண சபை ஊடாக இரு மாடி கட்டிடம் 2017 ஆம் ஆண்டு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இதன் மேல் தள கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டால் காணப்பட்டதை அடுத்து மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டுக்குரிய வகுப்பறைகள் குறைபாடாக காணப்பட்டதனால் கட்டிடத்தின் மேல்மாடிக்கான தேவைப் பாட்டை கருத்தில் கொண்டு முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் தாஹிர் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக தற்போது வடமேல் மாகாண சபையில் இருந்து சுமார் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கற்பிட்டி திகழி அல் மதீனா பாடசாலைக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் செய்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் என்.டி.எம் தாஹிர் கட்டிடத்தினைப் பார்வை இட்டதோடு துரிதமாக வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் சிபான், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஊர் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# எத்தலவெட்டுனுவேவ முஸ்லிம் மத்திய மாகா வித்தியாலயத்திற்கும் வகுப்பறை கட்டிடம்



(அஷ்ரப் ஏ சமத்)

அநுராதபுரம், எத்தலவெட்டுனுவேவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் குவைத் அரசாங்கத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அல் ஹிமா இஸ்லாமிய சேவிஸ் திட்டத்தின் கீழ் பௌதீக வளம் குறைந்த பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டடிங்களை நிர்மாணித்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் எத்தலவெட்டுனுவேவ முஸ்லிம் மத்திய மாகா வித்தியாலயத்திலும் 4 வகுப்பறைகளைக் கொண்ட முதலாவது மாடி (09) வெகு விமர்சையாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பிணர் இசாக் ஏ ரஹ்மான், மற்றும் குவைத் தூதுவரின் பிரநிதியாக இலங்கையின் குவைத் தூதுவர் அலுவலக அதிகாரி அஷ்ஷேக் எம். பிர்தௌஸ் நளிமி, அல் ஹிமா இஸ்லாமிய சேவிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம். ஏ நூறுல்லாஹ் நளிமி, உப தலைவர் ஏ.ஆர்.எம். அமினுடீன், கல்லூரி அதிபர் ஏ.சி.அமீன் மற்றும் உதவிப் கல்விப் பணிப்பாளர் எம்.நவாஸ் உட்பட பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் பெருமளவிம் கலந்து சிறப்பித்தனர்.

குவைத் அரசாங்கம் இலங்கையின் பின்தங்கிய பிரதேசத்தில் 40 க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இவ்வாறாக வகுப்பறைக் கட்டிடங்களை நிர்மாணித்து வருகின்றது. அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கையில் உள்ள மாணவர்கள் கல்வியில் முன்னேறி வாழ்வதற்காக கடந்த பத்து வருடங்களாக இலங்கைக்கு உதவி வருவதாகவும் இத் திட்டத்தினை அநுராதபுற மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலைகளுக்கு பெற்றுத் தருமாறும் அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பணர் இசாக் ஏ ரஹ்மான் குவைத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தாகவும் பணிப்பாளர் நூறுள்ளாஹ் மௌலவி தெரிவித்தார். இப் பாடசாலையின் ஏனைய குறைபாடுகளை பாராளுமன்ற உறுப்பிணர் உடன் நிறைவேற்றி வருவதாகவும் உறுதியளித்தார். இப்பாடசாலையில் கல்வி கற்ற உயர் தர 3 மாணவர்கள் 3 ஏ தரம் சித்தியெத்தியை இட்டும் அதிதிகள் பாராட்டினார்கள்.

# இஸ்ரேலின் தயாரிப்புகளை பெருநாள் கொண்டாட்டங்களில் தவிர்ப்போம்!

## - கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் -



நபி இப்றாஹீம் (அலை) அவர்களினதும், அவர்களது குடும்பத்தினதும் தியாகங்களை நினைவு கூரும் வகையில் உலக முஸ்லிம்களால் கொண்டாடப்படும் தியாகத்திருநாளாம் இப்புனித ஹஜ்ஜுப்பெருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

அவரது வாழ்த்து செய்தியில் மேலும், இலங்கையில் இன்று நாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் இத்தருணத்தில் இந்நாட்டு சிறுபான்மையின மக்கள் மட்டுமல்ல உலகம் வாழ் மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளதனை நாம் எல்லோரும் அறிவோம்.

பலஸ்தீன பூமியில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் இன்னமும் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் அல்லற்பட்டுக் கொண்டு இஸ்ரேலிய கொடூரர்களினால் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில்தான் நாம் இன்று ஹஜ்ஜுப் பெருநாளை இலங்கையில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு யுத்த அவலங்களால் பாதிக்கப்பட்ட எமது சகோதரர்களில் கணிசமானவர்கள் இன்னமும் அகதி முகாம்களில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆறுதலாளிக்கும் வகையில் எமது பெருநாள் துஆக்களில் அவர்களையும் இணைத்து கொள்வோம்.

மட்டுமின்றி எமது பெருநாள் கொண்டாட்டங்களில் இஸ்ரேலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பெருந்தொகை உதவிகளை, ஆயுத பலங்களை வழங்கும் உணவகங்கள் மற்றும் பானங்களை தவிர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இஸ்ரேலின் நண்பர்களை பலஸ்தீனின் உறவுகளாக உள்ள நாம் வளர்க்க முன்வரக்கூடாது. மேற்கத்தைய உணவகங்கள், இஸ்ரேல் ஆதரவு தயாரிப்புக்கள், குளிர்பானங்களை பெருநாள் கொண்டாட்டங்களில் தவிப்பதுடன் அவற்றை நிரந்தரமாக புறக்கணிக்க செய்வதே பலஸ்தீனர்களுக்கு நாம் செய்யும் சிறிய உதவியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உழ்ஹிய்யா வழிகாட்டல்

உழ்ஹிய்யா என்பது இஸ்லாத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஸுன்னத்தாகும். சில அறிஞர்கள் உழ்ஹிய்யா கொடுப்பது வாஜிப் என்றும் கூறியுள்ளனர். உழ்ஹிய்யா கொடுப்பது பற்றி அல்லாஹுத் தஆலா அல்-குர்ஆனில் 'உமது இறைவனுக்காக நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக.' (108: 02) என்று குறிப்பிட்டுள்ளான்.

இஸ்லாம் வழிகாட்டியுள்ள சகல நெறிமுறைகளையும் பேணி இவ்வணக்கத்தை நிறைவேற்றுவதோடு எமது நாட்டில் நடைமுறையிலுள்ள விலங்குச் சட்டம் (Animal Act No. 29 of 1958) கூறும் விடயங்களையும் கட்டாயம் கவனத்திற் கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா முஸ்லிம்களை வேண்டிக் கொள்கின்றது.

ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றையே உழ்ஹிய்யாவாகக் கொடுக்க வேண்டும் என்பது மார்க்க அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில், ஒட்டகம் கிடைக்கப்பெறாமையினால் ஆடு அல்லது மாட்டையே உழ்ஹிய்யாவாகக் கொடுக்க முடியும். அவையல்லாத எதுவும் உழ்ஹிய்யாவாக நிறைவேற மாட்டாது. இது பற்றிய ஜம்இய்யாவின் வழிகாட்டல் இவ்விணைப்பில் காணப்படுகின்றது.

உழ்ஹிய்யாவுடைய அமல்களை நிறைவேற்றுவோர் பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்:

1. உழ்ஹிய்யா கொடுக்க எண்ணமுள்ளவர்கள் துல்ஹஜ் மாதம் பிறந்ததிலிருந்து உழ்ஹிய்யா கொடுக்கும் வரை உடல் உரோமங்களை நீக்குவதையும் நகங்களை களைவதையும் தவிர்ந்து கொள்வது சுன்னத்தாகும்.

2. ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று சூரியன் உதயமாகி பெருநாள் தொழுகையையும், இரு குத்பாக்களையும் நிகழ்த்துவதற்குத் தேவையான நேரம் சென்றதிலிருந்து துல் ஹிஜ்ஜஹ் 13 ஆம் நாள் சூரியன் மறையும் வரை உழ்ஹிய்யாவை நிறைவேற்றலாம்.

3. ஓர் ஒட்டகம் அல்லது ஒரு மாட்டில் ஏழு நபர்கள் மாத்திரமே கூட்டுச்சேர முடியும். ஏழு நபர்கள் இணைந்து ஒரு மாட்டையோ அல்லது ஓர் ஒட்டகத்தையோ உழ்ஹிய்யாவாக நிறைவேற்றுவதை விட, தனித்தனியாக ஒவ்வொருவரும், ஓர் ஆட்டை அல்லது ஒரு மாட்டை அவரவர் வசதிக்கேற்ப உழ்ஹிய்யா கொடுப்பது ஏற்றமானதாகும். குடும்பத்திலுள்ள பொறுப்பாளர் ஓர் ஆட்டை அல்லது மாடு, ஒட்டகத்திலிருந்து ஏழிலொரு பங்கை உழ்ஹிய்யாவாக கொடுப்பது தன் குடும்பம் சார்பாக போதுமாகி விடும். என்றாலும் தனித்தனியாக கொடுப்பது சிறந்ததாகும். இச்சிறப்பினை அடைந்து கொள்ள ஒவ்வொருவரும் தனது சக்திக்கேற்ப முயற்சிக்க வேண்டும்.



4. பலர் ஒன்றுசேர்ந்து கூட்டாக உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் போது பேணப்பட வேண்டிய ஒழுங்குகள் பற்றிய ஜம்இய்யாவின் வழிகாட்டல் இவ்விணைப்பில் காணப்படுகின்றது. அவற்றை சரிவர பின்பற்றி செயற்படல் வேண்டும்.

5. நம் நாட்டின் சட்டத்தை கவனத்திற் கொண்டு, மிருகத்தின் உரிமைக்கான சான்றிதழ், மாட்டின் அல்லது ஆட்டின் விபரச் சீட்டு, சுகாதார அத்தாட்சிப் பத்திரம், மிருகங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் போன்ற ஆவணங்களை முன்கூட்டியே தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

6. அனுமதியின்றி உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை வண்டிகளில் ஏற்றி வருவதையும், அனுமதி பெற்றதை விட கூடுதலான எண்ணிக்கையில் எடுத்து வருவதையும் முற்றிலும் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

7. உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் எவ்வித நோவினையையும் கொடுப்பது கூடாது.

8. உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை அறுக்கும் வரை பிராணிகளுக்கான தீனி கொடுக்கப்படல் வேண்டும்.

9. உழ்ஹிய்யாவுக்குரிய பிராணிகள் அதனது இறைச்சியை குறைக்கக்கூடிய வகையில் இருக்கக்கூடிய குறைகளை விட்டும் நீங்கியிருத்தல் வேண்டும்.

10. அறுப்பதற்காகப் பயன்படுத்தும் கத்தியை நன்றாகத் தீட்டி, கூர்மையாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.

11. உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை ஒன்றுக்கு முன் ஒன்றைக் கிடத்தி அறுக்கக் கூடாது.

12. குர்பானிக்கு பயன்படுத்தப்படும் இடத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதோடு, அறுவைப் பிராணியின் எலும்பு, இரத்தம் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்களை அகற்றும் போது சுகாதார விதிமுறைகளைப் பேணிக் கொள்ள வேண்டும்.

13. அறுவைக்காகப் பயன்படுத்திய இடத்தில் கிருமி நாசினிகளைத் தெளித்து சுத்தத்தை உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.

14. பல்லின மக்களோடு வாழும் நாம் பிறமத சமூகத்தவர்களின் உணர்வுகள் தூண்டப்படும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது.

15. உழ்ஹிய்யாவுக்காக அறுப்புப் பிராணிகளை வைத்திருக்கும் போதும் உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் போதும் உழ்ஹிய்யாவை நிறைவேற்றியதன் பின்னரும் புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் எடுப்பதை தவிர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, சமூக வலைத்தளங்களில் அவற்றைப் பகிர்ந்து கொள்வதை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பள்ளிவாயல் இமாம்கள், கதீப்மார்கள் உழ்ஹிய்யாவின் சிறப்பையும் அவசியத்தையும் பற்றிப் பேசுவதோடு அதன் சட்ட திட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் தெளிவுபடுத்துவதோடு பல்லின மக்கள் வாழ்கின்ற சூழலில் அவர்களின் உணர்வுகள் பாதிக்கப்படாத வண்ணம் முறையாக உழ்ஹிய்யாவை நிறைவேற்றுவது பற்றியும் முஸ்லிம்களுக்கு கட்டாயம் தெளிவுபடுத்த வேண்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அன்பாகக் கேட்டுக் கொள்கின்றது.




# பெருநாளும் பெண்களும்...

பயாஸா பாஸில்

முஸ்லிம்களுக்கான இரு பெரு நாட்களுமே மிகவும் விஷேடம் தான். ஒன்று நோன்புப் பெருநாள். முழு மாதம் நோன்பினை நோற்று, மாத இறுதியில் பெருநாள் கொண்டாடுகிறோம்.

அடுத்தது ஹஜ் பெருநாள். துல் ஹஜ் மாதம் பிறை தென்பட்டதிலிருந்து பத்தாம் நாள் பெருநாள் கொண்டாடுகிறோம். இந்த ஹஜ் கொண்டாட்டத்திற்கு ஆரம்ப மூலமாக இப்றாஹீம் நபியின் தியாக சரித்திரமே காணப்படுகிறது.

இந்த இரு பெரு நாட்களுமே எல்லா முஸ்லிம்களுக்கும் விஷேடம் தான்.. அதிலும் பெண்களுக்கு அதிவிஷேடம்..

"சொல்லவா வேண்டும்...?!" என நீங்கள் அங்கலாய்ப்பது எனக்கும் கேட்கத்தான் செய்கிறது.

இதோ உங்களுக்கான சில வழிமுறைகள்...,

*1) முற்கூட்டியே அல்லது முந்திய நாளே அடுத்த நாளுக்குரிய செயற்திட்டங்களை திட்டமிட்டுக் கொள்ளுங்கள்*

- நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளை பட்டியற்படுத்தி எழுதிக் கொள்ளுங்கள்.
- நேரம் ஏற்றவாறு பார்த்து ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.
- செய்யப்பட்ட வேலைகளை ஒரு அடையாளம் இட்டுக் கொள்ளுங்கள்.
- நாளின் இறுதியில் எல்லா வேலைகளும் முடிய எந்த வேலை மீதமுள்ளது என உணர்வீர்கள்.
- மீதமுள்ள வேலையை மட்டும் செய்துகொள்ள கால அவகாசம் எடுக்கலாம்.

இப்போது மனதிற்கு அமைதியை உணர்வீர்கள்.

*2) நேர முகாமைத்துவம்*

- நேரத்தை சரிவர பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.
- எப்பாடுபட்டாவது அந்த நேரத்திற்குள் வேலையை செய்து கொள்ளுங்கள்.
- இன்று செய்ய வேண்டிய வேலைகளை இன்றே முடித்துக் கொள்ளுங்கள். அதனை நாளை வரை பிற்படுத்தாதீர்கள்.

*3) முன்னாயத்தம் மிகவும் சிறந்தது.*

- பெருநாளைக்குரிய சிற்றுண்டி வகைகளை முன்னைய தினம் இரவில் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.
- குளிர்பான வகைகளாயின் குளிர்சாதனப்பெட்டியை உபயோகப்படுத்தலாம்.
- காலைக்குத் தேவையான ஆடைகளை இரவிலேயே அயன் செய்து வைத்துக் கொள்ளுங்கள்..

முடிந்தவரை முயற்சி செய்து பாருங்கள்..

இந்த முறை பெருநாள் களை கட்டும்..

காலை நேர பரபரப்பையும் தவிர்க்கலாம்...

இனியென்ன கொண்டாட்டம் தான்....!!!



வாசகர்கள் அனைவருக்கும் ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்..!!

# 9ஆவது ரி20 உலகக்கிண்ணம்

## முதல் சுற்றுடன் நடையைக் கட்டிய ஜாம்பவான் அணிகள்



அரபாத் பஹுர்தீன்

9ஆது ரி20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்றுள்ள இலங்கை அணி முதல் சுற்றுடன் வெளியேறவுள்ளதாக நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ரி20 உலகக்கிண்ண வரலாற்றில் இலங்கை அணி முதல் சுற்றுடன் வெளியேறும் முதல் சந்தர்ப்பமாகவும் பதிவாகியுள்ளதுடன் கடந்த உலகக்கிண்ண தொடரில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய பாகிஸ்தான் மற்றும் அரையிறுதிக்குத் தெரிவாகியிருந்த நியூஸிலாந்து ஆகிய அணிகளும் நடையைக் கட்டியுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெற்றுவரும் 9 ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்றி;ருக்க ஒரு குழுவில் 5 அணிகள் வீதம் 4 குழுக்கள் இத் தொடரில் முதல் சுற்றில் பங்கெடுத்துள்ளன. அதற்கமைய 2ஆம் சுற்று ஆட்டத்திற்கு ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களைப் பெரும் அணிகள் தகுதி பெறும் வண்ணம் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.

இதில் இலங்கை அணி முதல் சுற்றில் குழு டீ இல் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் நெதர்லாந்து அணிகள் இடம்பிடித்திருந்தன. இதில் இலங்கை அணி கடந்த 3ஆம் திகதி தென்னாபிரிக்க அணியை எதிர்த்தாடியது. இப்போட்டியில் மிக மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

பின்னர் கடந்த 8ஆம் திகதி டலஸ்ஸ ில் இலங்கை அணி 2ஆவது லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை




புள்ளிகளுடன் அடுத்த சுற்றுக்கு தெரிவாக , பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து அணிகள் தலா 2 புள்ளிகளுடன் 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களில் இருக்க நேபாளம் அணி 1 புள்ளியுடன் ஓட்ட சராசரியில் 4ஆவது இடத்தில் காணப்பட இலங்கை அணி 5ஆது இடத்தில் இடம்பிடித்தது.

இந்நிலையில் இலங்கை அணி சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறுதாக இருந்தால் நேற்றைய பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி இடம்பெறாமலும், இலங்கை, நெதர்லாந்தை எதிர்கொள்ளும் இறுதி லீக் போட்டியில் மிகப் பெரிய வெற்றியை இலங்கை பெறவேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை உண்டாகியிருந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி இடம்பெற்று அதில் பங்களாதேஷ் வெற்றியும் பெற்றுக் கொள்ள இலங்கை அணியின் அடுத்த சுற்று மற்றும் உலக்கிண்ண சம்பியன் கனவு என அனைத்தும் கலைந்து போனது.

இந்நிலையில் எதிர்வரும் 17ஆம் அணிக்கு எதிரான போட்டியில் அமெரிக்கா தோற்று , பாகிஸ்தான் அணி அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றால் பாகிஸ்தான் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும் என்றிருக்க , அயர்லாந்து எதிர் அமெரிக்கா போட்டி மழையால் கைவிடப்பட இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளிகள் வழங்கப்பட்டமையால் அமெரிக்கா அணி சுப்பன் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றதுடன் பாகிஸ்தான் அணி முதல் தடவையாக முதல் சுற்றுடன் வெளியேறியது.

அதேபோல் 8ஆவது ரி20 உலகக்கிண்ண தொடரின் அரையிறுதிப் போட்டி வரை முன்னேறிய இருந்த நியூசிலாந்து அணி ஆப்கானிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளிடன் மோசமாகத் தோற்று முதல் சுற்றுடன் தாயகம் திரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மற்றைய முன்னனி அணிகளுடன் ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தகுதி பெற்றுள்ளமமை விசேட அம்சமாகும்.



# யூரோ கிண்ண கால்ப்பந்தாட்டத் தொடர்

## நெதர்லாந்தை கோல்களால் திணறடித்த ஜெர்மனி

யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் முதல் போட்டியின் நேற்று (15) நெதர்லாந்து அணியை எதிர்கொண்ட ஜெர்மனி 5:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பதிவு செய்தது.

2024ஆம் ஆண்டுக்கான யூரோ கிண்ண கால்பந்துப் போட்டித் தொடர் ஜெர்மனியில் அதிகாரப்பூர்வமாக நேற்று ஆரம்பமாகியது. இத் தொடரில் மொத்தம் 24 அணிகள் பங்கேற்றிருக்க ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் 6 குழுக்களில் அணிகள் அங்கம் பெற்றுள்ளன. பின்னர் 2ஆம் சுற்றான சுப்பர் 16 இடம்பெற்று பின்னர் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் நிறைக்கு சந்து இறுதியாக தீர்மாணமிக்க இறுதிப் போட்டி ஜ/லை மாதம் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அதற்கமைய குழு ஏ இல் இடம்பெற்றுள்ள போட்டிகளை நடாத்தும் ஜெர்மனி அணி நெதர்லாந்து அணியை இதன் தொடக்க ஆட்டத்தில் எதிர்கொண்டு விளையாடியது.

இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் தனது ஆதிக்கத்தை செலுத்திய ஜெர்மனி ப்ளோரியல் விர்ட்ஸ்ஸின் 10ஆது நிமிட கோலால் முன்னிலை பெற்றதுடன் 19ஆவது நிமிடத்தில் ஜமால் முசியாலாவின் அசத்தல் கோலின் உதவியுடன் 2:0 என ஆதிக்கத்தை அதிகப்படுத்தியது. பின்னர் முதல் பாதியின் இறுதி நிமிடத்தில் நெதர்லாந்து வீரரான ரயன் போர்டியலின் முறையற்ற பந்துப் பறிப்பால் சிவப்பு அட்டை வழஙிகப்பட்டதுடன் ஜெர்மனி அணிக்கு பெணால்ட்டி உதையும் கிடைக்க 3ஆது கோலை உட்செலுத்தி முதல் பாதியை 3:0 என நிறைவு செய்தது.

பின்னர் தொடர்ந்த 2ஆது பாதி ஆட்டத்தில் நிகல்ஸ் புல்கிரிப்ஸ் 68ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க ஆட்டத்தின் 87 ஆது நிமிடத்தில் வைத்து ஜெர்மன் வீரரான குடிசெர் ஓன்கோலை உட்செலுத்த கோல் கணக்கை ஆரம்பித்தது நெதர்லாந்து. பின்னர் போட்டியின் மேலதீக நிமிடமான 93ஆவது நிமிடத்தில் வைத்து ஏம்ரே கேண் கோலை அடித்து அசத்த போட்டி நிறைவடைகையில் ஜெர்மனி அணி 5:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் மிக இலகு வெற்றி பெற்று புள்ளிப்பட்டியிலில் 3 புள்ளிகளுடன் தன் ஆதிக்கத்தை முன்னிறுத்தியது.

# சகல துறைகளிலும் பிரகாசித்த இலங்கை மகளிர் அணியிடம் தோற்றுப் போனது மே.இ. தீவுகள்



சுற்றுலா மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் சகலதுறையில் பிரகாசித்த இலங்கை மகளிர் அணி 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி இன்று ஹம்பாந்தேட்டை மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சமரி அத்தபத்து முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி 47.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஹெய்லி மெத்யூஸ் 38 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் சுகன்டினா குமாரி மற்றும் கவிஷா டில்ஹானி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் எட்டக்கூடிய 196 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை அணிக்கு சமரி அத்தபத்து (40), ஹசினி பெரேரா (43) ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்ததுடன், ஹர்சித்த சமரவிக்ரம ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 34.1 ஓவர்களில் 4 வவிக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

# மன்னார் வலயமட்ட கரப்பந்தாட்டப் போட்டியில்

## சம்பியன் மகுடம் சூடியது எருக்கலம்பிட்டி மகளிர் பாடசாலை



(மிஸ்ஜாத் ஷாபி)

மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிநிகழ்வின் பெண்களுக்கான 16 வயதிற்குட்பட்ட போட்டியில் மன்னார் பெண்கள் கல்லூ ரி (கொண்வேன்ட்) அணியை வீழ்த்தி சம்பியன் மகுடம் சூடியது எருக்கலம்பிட்டி மகளிர் பாடசாலை.

மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வில் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளரின் தலைமையில் நேற்றைய தினம் தலைமன்னார் ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம்பெற்றது.

இதில் பெண்கள் 16 வயது பிரிவினருக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மன்னார் எருக்கலம்பிட்டி மகளிர் பாடசாலை மற்றும் மன்னார் பெண்கள் கல்லூரி (கொண்வேண்ட்) ஆகியன இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மன்னார் பெண்கள் (கொண்வேண்ட்) கல்லூ ரியை எருக்கலம்பிட்டி மகளிர் பாடசாலை தோற்கடித்து சம்பியன் ஆனது. இதன்மூலம் முதல் முறையாக வலய மட்ட கரப்பந்தாட்ட போட்டியில் சம்பியன் பட்டம் வென்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது எருக்கலம்பிட்டி மகளிர் பாடசாலை.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.